# 9 சுவைக் கதைகள்

03

TB
031,3(9)
N65
86600

# ஒன்பது
# சுவைக் கதைகள்

( ஒன்பதாம் வகுப்புக்குரியது )

வித்துவான் நா. பழநியப்பன்
தமிழாசிரியர்
முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை - 1.

சாரதா பப்ளிஷர்ஸ்
நெல்லூர் :: சென்னை-1.

முதற் பதிப்பு : நவம்பர் — 1965
© பதிப்புரிமை

விலை ரூ. 1—00

10·9 கி. கி. வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டது)

86600

ஸ்ரீநிவாஸ் பிரிண்டிங் பிரஸ்,
329, தங்கசாலைத் தெரு, சென்னை-1

# நாட்டு வணக்கம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதித ரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய, ஜய ஹே!

—இரவீந்திரநாத தாகூர்.

# பொருள்

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும், சிந்துவையும், குஜராத்தையும், மகாராஷ்டிரத்தையும், திராவிடத்தையும், ஒரிஸாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி யடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது; இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப் படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு வெற்றி, வெற்றி, வெற்றி.

---

Correct version used Vide R. C. No. 33/T. B. C./56
Dated 12—7—1956.

# உள்ளுறை


| என் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | புத்தரும் தேவதத்தனும் | ... | 1 |
| 2. | வேடனும் அந்தணனும் | ... | 17 |
| 3. | தாயும் சேயும் | ... | 25 |
| 4. | பத்திரையும் சத்துகனும் | ... | 33 |
| 5. | அரியநாதரும் சோதிடரும் | ... | 49 |
| 6. | வில்வீரனும் கொடுங்கோலனும் | ... | 66 |
| 7. | தந்தையும் மைந்தனும் | ... | 76 |
| 8. | பாண்டியனும் நக்கீரரும் | ... | 93 |
| 9. | எயினனும் நன்னனும் | ... | 96 |

# 1. புத்தரும் தேவதத்தனும்

நமது இந்திய நாட்டின் வடக்கெல்லை இமயமலை ஆகும். அம்மலையின் அடிவாரத்தில் **சாக்கியர்** என்னும் கூட்டத்தார் முன்னொரு காலத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய தலைநகரம் **கபிலவாஸ்து** என்பது. அது **உரோகிணி** என்னும் ஆற்றங்கரையில் இருந்தது. கபிலவாஸ்து என்னும் நகரிலிருந்து **சுத்தோதனன்** என்னும் அரசன் ஒருவன், **காசி** முதல் மகதம் வரையுள்ள நிலப்பரப்பினை ஆண்டு வந்தான்.

அவன் அறிவில் சிறந்தவன்; வீரம் மிக்கவன்; ஒழுக்கம் உடையவன். அவனுக்கு **மாயாதேவி, பிரஜாபதி** என்னும் பெயருடைய மனைவியர் இருவர் இருந்தனர். மாயாதேவி அழகிலும் குணத்திலும் சிறந்தவள். அவள் ஒருநாள்—வைகாசிப் பௌர்ணமி யன்று — **உலும்பினி** என்னும் பூந்தோட்டத்தில் இருந்த அசோக மரத்தின் அடியில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

அக் குழந்தை மிக்கப் பேரழகுடன் திகழ்ந்தது. அதன் முகத்தில் தெய்வீக ஒளி வீசியது. குழந்தையைக் கண்டான் சுத்தோதனன்; மகிழ்ந்தான்; அதற்கு, 'எல்லா ஆசைகளையும் நிறைவு செய்பவன்' என்னும் பொருளுடைய **சர்வார்த்தசித்தன்** என்னும் பெயரையிட்டு அழைத்தான்; அவனுடைய குடும்பப் பெயராகிய **கௌதமன்** என்ற பெயரையும் சேர்த்து வழங்கினன். ஆனல், நாட்டு மக்கள் அனைவரும் அக் குழந்தையைச் **சித்தார்த்தன்** என்ற பெயராலேயே அழைத்து வந்தனர்.

இந் நிலையில் மாயாதேவி உடல் நோயுற்று இறந்து விட்டாள். அதன் பிறகு, பிரஜாபதி சித்தார்த்தனைத் தன் குழந்தை போலக் கருதி வளர்த்து வந்தாள். சித்தார்த்தன் வளர்மதி என வளர்ந்து வந்தான்; கல்வி கேள்விகளில் சிறந்த அறிவும் தேர்ச்சியும் பெற்றன்; வீரத்திலும் சிறந்து விளங்கினன்.

சித்தார்த்தனுக்குத் தக்க வயது வந்ததும், சுத்தோதனன் அவனுக்குச் சாக்கிய குலத்தில் உதித்த ஓர் இளமங்கையை — **யசோதரை** என்னும் பெயருடையாளை—மணம் முடித்து வைத்தான். அன்று முதல் இளவரசன் சித்தார்த்தன் யசோதரையோடு வாழ்க்கையை இனிது நடத்தி வந்தான்.

ஒரு நாள் சித்தார்த்தன் கபிலவாஸ்து நகரைச் சுற்றிப் பார்த்து வந்தான்; மூப்பு, பிணி, சாவு ஆகியவற்றில் மக்கள் உழன்று வருவதைக் கண்டான்; 'இம் மூன்றுந்தான் வாழ்க்கையா? இன்பம் என்பது கனவுதானே?' என்று எண்ணினன். அவனுக்கு வாழ்க்கை

வெறுத்தது. மாருத உண்மையையும், எல்லையற்ற அமைதியையும் அடைய விரும்பினன்; அதே எண்ணத்தோடு அரண்மனைக்குத் திரும்பினன்.

அப்பொழுது அவனுக்கு மகன் பிறந்திருந்தான்; அம்மகனுக்கு இராகுலன் என்று பெயரிட்டான்; சில நாள் அங்கேயே இருந்து வந்தான். ஆயினும், அவன் மனம் அமைதியுறவில்லை. துன்பம் நிறைந்த வாழ்க்கையைக் காண அவன் மனம் பொறுக்கவில்லை. அரண்மனை வாழ்வைத் துறக்க எண்ணினன்; காட்டிற்குச் சென்று நிலையான இன்பத்தைத் தேட விழைந்தான்.

அந்த எண்ணத்தோடு எழுந்தான்; அந்தப்புரம் சென்ருன்; தன் மனைவி யசோதரை, குழந்தை இராகுலனை அணைத்தவாறு கட்டிலிற் படுத்து உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

அவன் மனத்தில் அன்பு முகிழ்த்தது; பற்றுதல் உதித்தது. ஆயினும், மனத்தைக் கல்லாக்கிக்கொண்டான்; மனைவியையும், குழந்தையையும் நெருங்காமல், தொலைவிலிருந்தே பார்த்து விட்டு வெளியே வந்தான்; நேராகக் கபிலவாஸ்துவை அடுத்திருந்த ஓர் அடர்ந்த காட்டை அடைந்தான்; தான் அணிந்திருந்த நவரத்தினம் பதித்த மாலையைக் கழற்றி எறிந்தான்; இன்ப வாழ்க்கையின் சின்னங்களாக விளங்கிய ஏனைய ஆடை அணிகலன்களையும் களைந்தெறிந்தான்; தன்னிடம் இருந்த கத்தியால் தலை முடியினையும் அறுத்தெறிந்தான்; துறவுக் கோலத்தை அடைந்தான்; கல்லும் முள்ளும் குத்தக் கால் நடையாக நடந்து காட்டு வழியே சென்ருன்; வழியில்

ஏற்பட்ட பலப்பல இடையூறுகளையும் தாங்கிக்கொண்டான்; இறுதியாக மகத நாட்டின் தலைநகராகிய இராசகிருகத்தை அடைந்தான்.

அங்கு ஒரு மலை இருந்தது. அம்மலையின் அடிவாரத்தில் ஓர் ஆசிரமம் இருந்தது. அதில் **ஆராட கலாமு** என்னும் பெயருடைய புகழ்பெற்ற ஞானி ஒருவர் இருந்தார். அவரை அடைந்தான்; அவருடைய சீடருள் ஒருவன் ஆனான்; தக்க அறிவுரை பெற்றான்; அங்கேயே சில நாட்கள் தங்கியிருந்தான்.

ஆசிரமத்துச் சீடர்கள் அனைவரும் இர்ாச கிருகத்து வீதிகளில் சென்று பிச்சை எடுத்து வருவது வழக்கம். அதன்படி சித்தார்த்தன் அவர்களோடு ஒரு நாள் கையில் திருவோடு ஏந்திப் பிச்சை எடுக்கச் சென்றான். அவ்வாறு சென்றபோது இராசகிருக மக்கள் அவனுடைய இளமையையும், பேரழகினையும், பெருமிதத் தோற்றத்தையும், அவன் முகத்தில் தவழ்ந்த தெய்வீகக் களையையும் கண்டனர்; பெரு வியப்புற்றனர்; இராசகிருகத்தை ஆண்டு வந்த தங்கள் அரசனாகிய **பிம்பிசார**னிடம் அவனைப் பற்றிக் கூறினர்.

பிம்பிசாரன் அரண்மனை மேல்மாடத்திலிருந்து அந்த இளந் துறவி சித்தார்த்தனைப் பார்த்தான்; மிகவும் வியப்படைந்தான்; பிறகு ஆசிரமம் சென்றான்; சித்தார்த்தனைக் கண்டான்; "எனக்குக் குழந்தைகளே இல்லை. என்னுடன் வந்து விடு. இராசகிருகத்து இளவரசனாய் இருந்து எனக்குப்பின் அரசாளலாம். அழகும் இளமையும் அறிவும் நிறைந்த நீ, ஏன்

துறவியாக வாழவேண்டும்?" என்று அன்பு தவழ அழைத்தான்.

"அரசே! வணக்கம். தங்களுடைய அன்பு கனிந்த அழைப்பிற்கு மிக்க நன்றி! நான் யார் தெரியுமா?" என்று கேட்டான் சித்தார்த்தன்.

பிம்பிசாரன் விழித்தான்.

"நான் சுத்தோதனனின் மகன்; கபிலவாஸ்துவின் இளவரசன்!" என்று சித்தார்த்தன் கூறினான்.

பிம்பிசாரனுக்குச் சிறிது நடுக்க மேற்பட்டது. ஆயினும், ஒருவாறு சமாளித்துக்கொண்டான்; "அப்படியானால் நீ ஏன் இப்படித் துறவியாக வாழ வேண்டும்?" என்று கேட்டான்.

"எனக்கு அரண்மனை வாழ்க்கைப் பிடிக்கவில்லை; அரச பதவியும் பிடிக்கவில்லை. ஆகவே, அவற்றைத் துறந்துவிட்டேன். எளிய வாழ்க்கை வாழவேண்டும் என்பது என் எண்ணம். நிலையான இன்பத்தையும், நிறைந்த அமைதியையும் தேடி அடைவதே என் குறிக்கோள்!" என்று விடையிறுத்தான் சித்தார்த்தன்.

"உன் நோக்கம் அதுவானால், நான் குறுக்கிட வில்லை. ஆனால், ஒரு வேண்டுகோள்: உன் நோக்கம் முழுமையாக நிறைவேறியபின் நீ ஒருமுறை இராசகிருகம் வரவேண்டும்; அதைப்பற்றி நீ எடுத்துரைக்க வேண்டும்!" என்று பணிவன்புடன் வேண்டினான் பிம்பிசாரன்.

அவ்வாறே செய்வதாக அரசனுக்கு வாக்களித்தான் சித்தார்த்தன்; உடனே ஆசிரமத்திலிருந்து விடைபெற்ருன்; வேறு பல ஆசிரமங்களுக்குச் சென்ருன்; சான்ருேர் பலரைக் கண்டான்; துறவியர் சிலரை நெருங்கினுன்; அவர்களிடமிருந்து சிற்சில உண்மைகளே அறிந்தான். ஆயினும், அவனது குறிக்கோள் நிறைவேறவில்லே. அதனுல் ஊனே உருக்கிக் கடுந்தவம் புரிய விழைந்தான்; அதன் வழியாக ஆசையையும் பற்றுக்களேயும் வெல்ல எண்ணினுன்; அழியாத உண்மையை அடைய முயன்ருன்; அதன் பொருட்டு **உருவேலா** என்னும் நகரத்திற்கு அருகிலிருந்த காடொன்றினே அடைந்தான்; அங்கே தெளிந்த நீரோடை ஒன்றினேக் கண்டான்; அதன் கரையில் இருந்த ஆலமரத்தடியில் தனது தவத்தைத் துவக்கினுன்; மழையென்றும் வெயிலென்றும், இரவென்றும் பகலென்றும் பாராமலும், ஊண் உறக்கம் இல்லாமலும் கடுமையாக ஆருண்டுக்காலம் தவம் செய்தான்.

அவனுடைய உடல் எலும்புக் கூடாக ஆயிற்று. கன்னங்கள் ஒட்டி உலர்ந்து போயின. கண்கள் குழி விழுந்து மங்கி மறைந்து காட்சி அளித்தன. கால்கள் வலிமை இழந்தன. ஆயினும், அவனுடைய நோக்கம் ஈடேறவில்லே. அதனுல் வலிவிழந்த உடலுக்குச் சிறிது உணவளித்து, உடல் உரம் பெற்ற பின் மறுபடியும் தனது நோக்கத்தை அடைய முயலலாம் எனக் கருதினுன்; திரும்பவும் அங்கேயே இருக்கலானுன்.

**சுஜாதை** என்பவள் ஒரு பெண். அவள் பல்குனி என்னும் ஆற்றங்கரை யருகே இருந்த **சேஞனி**

என்னும் சிற்றூரைச் சேர்ந்தவள்; செல்வர் வீட்டில் பிறந்தவள். அவளுக்குக் கணவன் இருந்தான். ஆயினும், குழந்தை யில்லை. அதனுல் அவள் நாள் தோறும் அரச மரத்தைச் சுற்றினுள்; வேறு பல நோன்புகளும் நோற்ருள். இறுதியில் அவளுக்கு ஓர் ஆண் மகன் பிறந்தான். 'அரச மரத்தைச் சுற்றியதாலேயே தனக்குக் குழந்தை பிறந்தது' என அவள் நம்பினுள். அதன்பொருட்டு ஆண்டில் ஒரு நாள் அவள் பால்பாயசம் ஆக்கி, அந்தக் காட்டில் உள்ள தேவதைகளுக்குப் படைத்துவரும் வழக்கத்தை மேற்கொண்டாள்.

அன்று அந்த நாள் வந்தது. பால் பாயசத்தை ஆக்கினுள். பால் பக்குவமாய்க் காய்ந்தது; தனிப் பட்ட மணமும் கமழ்ந்தது. அவள் மனமும் மகிழ்ந்தது. பொற்கிண்ணம் ஒன்றில் பாயசத்தை எடுத்துக் கொண்டு உருவேலாக் காட்டிற்குச் சென்ருள்; நீரோடையின் அருகே இருந்த அரசமரத்தை நெருங்கினுள். அப்பொழுது அவள் கண்ட காட்சி அவளைப் பெருவியப்பில் ஆழ்த்தியது. அரசமரத்தடியில் அமர்ந்து அருந்தவம் இயற்றிய சித்தார்த்தனைக் கண்டே அவள் அவ்வாறு வியப்படைந்தாள்; அவனைத் தாழ்மையுடன் வணங்கினுள்; பொற் கிண்ணத்தில் கொண்டுவந்திருந்த பால் பாயசத்தைப் பரிவுடன் அளித்தாள்.

சித்தார்த்தன் அவளை வாழ்த்தினுன்; அந்த அமுதத்தை அன்புடன் பருகினுன்; புத்துயிர் பெற்ருன்; மெல்ல எழுந்தான்; பல்குனி என்னும் ஆற்றங்கரையின் மேலே வளர்ந்திருந்த போதி

மரத்தை — அரச மரத்தை — நோக்கி நடந்தான்; அதன் அடியில் பசும்புல்லைப் பரப்பினுன்; அதன்மேல் அமர்ந்தான்; 'எனக்கு நிறைந்த ஞானம் கிடைக்கும் வரையில் நான் இதனை விட்டு எழுந்திருக்கப் போவதில்லை' என்று முடிவு செய்தான்; தியானத்தில் ஈடுபட்டான்.

அப்பொழுது பலர் இடையூறு செய்து அவனது தவத்தைக் கலைக்கப் பார்த்தனர். எதற்கும் இடங் கொடுக்காமல் இருந்து வந்தான். நாளடைவில் அவனுடைய ஐயங்கள் படிப்படியாக நீங்கலாயின. நிலையான அமைதியும் நிலைத்த இன்பமும் தரும் தெய்வீகத் தத்துவம் அவனுக்கு உதயமாயிற்று. உண்மை உணர்ந்தான்; அறிவொளி பெற்ருன்; அரசமரத்தடியில் வைகாசிப் பௌர்ணமி யன்று **புத்தர்** — 'நிறை ஞானி' — ஆனுன்.

அதன் பிறகு புத்தர் ஏழுநாட்கள் போதி மரத்தடியிலேயே இருந்தார்; பிறகு **சிவதான்** என்னும் இடத்தை அடைந்தார். அங்கு **மான் சோலை** ஒன்று இருந்தது. அதில் ஐந்து துறவிகள் இருந்தனர். அவர்கள் புத்தரைத் தங்களுடைய குருவாக ஏற்றுக் கொண்டனர். புத்தர் முதன் முதல் அந்த ஐவருக்கும் தாம் கண்ட புத்த தருமத்தை எடுத்துரைத்தார்.

அன்று முதல் புத்தருடைய தருமசக்கரம் சுழலலாயிற்று. அவருடைய அறிவுரையைக் கேட்கப் பலர் பெருந்திரளாகக் கூடினர்; புத்த சங்கத்தை நிறுவினர். அதில் எண்ணற்ற உறுப்பினர் சேர்ந்தனர். பிறகு புத்தர் எங்கும் தம் சீடர்களுடன் சென்ருர்; தருமத்தைப் போதித்தார். நாடெங்கும்

புத்த சங்கம் தோன்றலாயிற்று. புத்தர் புகழும் பரவலாயிற்று!

ஒரு நாள் புத்தர் **நிக்ரோதா** என்னும் பெயருடைய சோலையில் தங்கியிருந்தார். அப்பொழுது சிலர் அவருடைய சீடராக விரும்பினர். அவர்களுள் **தேவதத்தனும் ஆனந்தனும்** குறிப்பிடத் தக்கவர்கள் ஆவார்கள்.

தேவதத்தன் யசோதரையைப் பெற நடந்த போட்டியில் தோல்வியுற்றவன். அதனுல், அவன் புத்தரிடம் சினமும் வெறுப்பும் கொண்டிருந்தான். அவற்ருல் அவன், புத்தரின் சீடனுய் அவரருகே இருந்துகொண்டு, அவரைப் பழிவாங்க எண்ணினுன்.

தேவதத்தனும் ஆனந்தனும் நிக்ரோதாச் சோலையை அடைந்தனர். புத்தர் அவர்களை அன்புடன் வரவேற்ருர்.

புத்தருக்கு ஆனந்தனிடம் தனிப்பட்ட அன்பு ஏற்பட்டது. அவன் எளிமை யுடையவன்; பண்பு பல பெற்றவன்; எல்லாரிடத்தும் அளவற்ற அன்பும் உடையவன்; குருபத்தி கொண்டவன். அதனுல் அவன் பிற்காலத்தில் புத்தருடைய வலக் கையாகவும், அந்தரங்க சீடனுகவும் விளங்கினுன்.

தேவதத்தன் புத்தரின் சீடனுக இருந்துகொண்டே அவரைப் பழிவாங்க எண்ணினுன். அதன் பொருட்டு மறைவாகப் பல முயற்சிகளைச் செய்து பார்த்தான். எதுவும் பயன் பெறவில்லை. அதற்கு மாருகப் புத்தருடைய புகழ் பெருகி வந்தது; அதனுல் அவனிடம் குடிகொண்டிருந்த பொருமையும், வெறுப்பும், சினமும் நாளடைவில் வளர்ந்து

முற்றலாயின. அவன் புத்தருக்கு எதிராக வெளிப் படையாக நடந்து கொள்ளத் தொடங்கினன்.

அதனல் புத்தருடைய சீடர்களுக்குள்ளே குழப் பம் ஏற்படலாயிற்று. சீடர்களிற் சிலர் மனவருத்தம் கொண்டிருந்தனர். 'இவற்றுக்கெல்லாம் காரணம் தேவதத்தனே' என அறிந்தார் புத்தர். உடனே அவனைச் சங்கத்திலிருந்து விலக்கிவிட்டார்.

புத்த சங்கத்திலிருந்து விலக்கப்பட்ட தேவதத் தன், முன்னிலும் மிக்க துணிவு பெற்ருன்; புத்தரைக் கொன்றுவிட எண்ணினன்; அதன் பிறகு புத்த சங் கத்தின் தலைவனுகத் தான் வரவேண்டும் என்றும் விழைந்தான். அவற்றின் பொருட்டு எத்தகைய தகாத செயல்களையும் செய்ய ஆயத்தமாயிருந்தான் அவன்.

இத் தீய எண்ணங்களோடு ஒரு நாள் தேவதத் தன் இராசகிருகம் சென்ருன்; இளவரசனை **அசாத சத்துருவை**— பிம்பிசாரனின் மகனை—நேரில் பார்த்து, அவனது அன்பைப் பெற்ருன்; நாளடைவில் அவனது நல்ல மனத்தைக் கெடுத்தான்; தந்தைக்கு எதிராக மகனைத் தூண்டினன். 'பிம்பிசாரன் புத்த ரிடம் பெரும் பத்தியுடையவன்; அவனை ஒழித்துக் கட்டிவிட்டு, அவனுடைய இருக்கையில் அசாத சத்துருவை வைத்துவிட்டால், தன் காரியம் எளிதில் முடியும்; வெற்றிபெறும்' என்பது தேவதத்தனின் திட்டம்.

அத்திட்டத்தின்படி பிம்பிசாரனைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்துமாறு அசாதசத்துருவைத் தூண்டினன். இதனை அறிந்தார் அசாதசத்துருவின் தாயார். மகனிடம் எவ்வளவோ எடுத்துக் கூறித்

தடுத்துப் பார்த்தார். அவன் அதனைப் பொருட்படுத்த வில்லை. தேவதத்தன் ஆட்டிவைத்தபடியெல்லாம் ஆடலானுன்; பிம்பிசாரனைச் சிறைப்படுத்தினுன். சிறைப்பட்ட பிம்பிசாரன் மனமுடைந்து சிறையி லேயே உயிர்துறந்தான் !

அதன் பிறகு, அசாதசத்துரு தேவதத்தனின் சொற்படி பௌத்த மடங்களை மூடும்படியும், யாரும் புத்தரை வணங்கக் கூடாது என்றும், புத்த சங்கத்தி லும் யாரும் சேரக் கூடாது என்றும் நாளுக்கோர் ஆணையாக இட்டு வந்தான்.

இவற்றை யெல்லாம் புத்தர் தம் சீடர்களின் வாயி லாகக் கேள்வியுற்ருர்; தேவதத்தன் இன்னும் கொடிய செயல்களில் இறங்கக் கூடும் எனத் தம் சீடர்கள் அச்சமுற்றிருப்பதையும் அறிந்தார்.

உடனே புத்தர் தம் சீடர்களைப் பார்த்தா; "சீடர்களே ! நீங்கள் எனக்காகக் கவலைப்பட வேண் டாம். தேவதத்தன் செய்யும் தீய செயல்களை எல்லாம் என்னுடைய நற்செயல்களால் வெல்லும் ஆற்றல் எனக்கு உண்டு. அவனது வெறுப்பை அன்பாலும், அவனது துன்புறுத்தலைக் கொல்லாமையாலும் (அகிம்சை) வெல்வேன்" என்றுகூறி, அவர்களு டைய கவலையைப் போக்கினுர்; உடனே இராசகிரு கத்தை நோக்கித் தம் சீடர்களுடன் புறப்பட்டார்.

புத்தர் இராசகிருகம் வருவதை அறிந்தான் தேவதத்தன்; சில ஆட்களை ஏவினுன்; அவர் களிடம் நஞ்சு தோய்ந்த அம்புகளையும், கத்திகளையும் கொடுத்து, புத்தர் வரும் வழியில் மறைந்திருக்கச் செய்தான்; அவர் வரும்போது அவரைக் கொன்று விட வேண்டும் என்றும், கொன்றுவிட்டால் தக்க

பொருள் தருவதாகவும் கூறினன். ஏவலாட்கள் அதற்கு உடன்பட்டனர்; விரைந்து புறப்பட்டுச் சென்று சோலையொன்றில் மறைந்திருந்தனர்.

அப்பொழுது புத்தர், அவர்கள் மறைந்துகொண்டிருந்த இடத்தருகே நடந்து வந்தார். தேவதத்தனல் ஏவி விடப்பட்ட ஆட்கள் எழ முயன்றனர். ஆனல் அவர்களால் எழ முடியவில்லை. அவர்களுடைய உடலங்கள் நடுங்கத் தொடங்கின. கையில் இருந்த அம்புகளும் கத்திகளும் அவர்களை யறியாமல் தாமாகவே நழுவி விழுந்தன. உடனே அவர்கள் தங்களுடைய கொடிய செயலை நினைந்தனர்; கண்ணீர் வடித்தனர்; புத்தர் அருகே சென்றனர்; அவர் திருவடிகளில் விழுந்து வணங்கினர்; தங்களை மன்னித்தருளுமாறு வேண்டினர்.

அருட்கடலாகிய புத்தர், அவர்களை மன்னித்து விட்டு, மீண்டும் நடக்கலானர்.

இதனை அறிந்த தேவதத்தன் வேருெரு சூழ்ச்சி செய்யலானன்.

ஒரு நாள் புத்தர் இராசகிருக வீதியில் தம் சீடர்களுடன் பிச்சை எடுக்கச் சென்ருர். அப்பொழுது தேவதத்தன் நளகிரி என்னும் மதம் பிடித்த யானையை அவர்கள்மேல் ஏவி விட்டான்.

யானை மதவெறியுடன் மிக விரைவாக ஓடி வந்தது; தெருவில் எதிர்ப்பட்டவர்களில் சிலரை மிதித்து நசுக்கியது; சிலரைத் தூக்கி எறிந்தது; மீண்டும் ஓடியது! இதனைக் கண்ட மக்கள் அலறினர்; எட்டுத் திசைகளிலும் ஓடி மறைந்தனர்.

யானையின் செயலைக் கண்டனர், புத்தரின் சீடர்கள். உடனே அவரிடம், "இதோ, மதங்கொண்ட

யானை ஒன்று ஓடிவருகின்றது. நாம் திரும்பி விட லாம்'' என்று கூறினர்.

புத்தர் அவர்களிடம் "அச்சப்படாதீர்கள்!'' என்று பொறுமையாகக் கூறினார்.



பிறகு தன்னை நோக்கி நெருங்கி வந்துகொண் டிருந்த யானையின் முன்னர்ச் சென்றார். அது அடங் காப் பெருஞ்சினத்துடன் பிளிறிக்கொண்டு வந்தது ; புத்தரை நெருங்கியது; அமைதியாக நின்றது; தன் முன்னங் கால்களை மடக்கிக் கொண்டு அவரை வணங்கியது; தன் துதிக்கையால் அவரது திருவடி களைத் தொட்டு வணங்கியது!

புத்தர் நளகிரியைத் தொட்டு வாழ்த்தினார்; தேவதத்தனது சூழ்ச்சியை அறிந்து வருந்தினார்.

இதனை அறிந்தான் தேவதத்தன். இருமுறை தோல்வியுற்றும் அவன் தனது வெறுப்பைத் தணித்துக் கொள்ளவில்லை. இனிப் பிறர் தயவு எதுவும் இல்லாமல், தானே புத்தரைக் கொன்றுவிடுவதென்று முடிவு செய்தான்.

புத்தர் இராசகிருகத்தில் தங்கியிருந்த காலத்தில் நாள்தோறும் மாலை வேளையில் ஒரு குன்றின் பக்கமாகச் சென்று உலவி வரும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் மாலையில் அவர் குன்றின் பக்கம் வருவதற்கு முன்பாகத் தேவதத்தன் அக்குன்றின் உச்சியை அடைந்தான்; உருட்டிவிடத் தக்கதான ஒரு பெரும் பாறையிருந்த இடத்தைக் கண்டு, அதன்பின் மறைந்திருந்தான்.

அப்போது புத்தர் அவ்வழியே வந்துகொண்டிருந்தார். தேவதத்தன் விரைவாக அந்தப் பாறையை உருட்டிவிட்டான்; அக்கல் அவரை நசுக்கிக்கொன்று விடும் என்ற கருத்தோடு, குன்றின் உச்சியிலிருந்து கீழ்நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் உருட்டிவிட்ட பாறை அடிவாரத்தில் இருந்த மரத்தின்மீது மோதி இரண்டு துண்டம் ஆகியது. ஒரு துண்டம் புத்தரின் வலப் பக்கமாக விழுந்தது. மற்றொரு துண்டம் அவரின் இடப் பக்கமாக விழுந்தது.

புத்தர் உயிர் தப்பினார்; 'இதுவும் தேவதத்தனின் செயல்தான்' என உணர்ந்தார்; குன்றின் உச்சியை நிமிர்ந்து பார்த்தார். அப்போது அவர் கண்களில் நீர் நிறைந்து வழிந்து கொண்டிருந்தது. 'இத்தீய

செயலுக்கும் ஏற்ற பரிசு விரைவில் கிடைத்துவிடும்!' என்று வருந்திக் கூறியவாறு நடந்தார்.

இந்தச் சமயத்தில் தேவதத்தனுக்கு ஆதரவாயிருந்த இராசகிருக அரசன் அசாதசத்துரு பிணி வாய்ப்பட்டான். அதற்கேற்ற மருத்துவம் செய்யப் பட்டது. மருத்துவர் அனைவரும், "இஃது ஒரு தீராத மன நோய்!" என்று கூறிக் கைவிட்டனர்.

அமைச்சர்கள், "புத்தரை அடைந்தால் இந் நோய் தீரும்!" எனக் கூறினர்.

"அப்படியானால் அவரை உடனே அழைத்து வாருங்கள்!" என்றான் அசாதசத்துரு.

அமைச்சர்கள் சிறிது தயங்கினர்.

"ஏன் தயங்குகிறீர்கள்?" என்று கேட்டான் அசாதசத்துரு.

துணிவுள்ள அமைச்சர் ஒருவர் முன் வந்தார்; "அரசே! அவர் இங்கு வரமாட்டார்; நாம்தாம் அவரிடம் செல்லவேண்டும்!" என்றார்.

அசாதசத்துரு புத்தரைப் பழித்ததை நினைந்தும், தேவதத்தன் சொற்படி ஆடியதை எண்ணியும், தந்தையைக் கொன்றதைக் குறித்தும் பெரிதும் வருந்தினான்; புத்தரைத் தேடிச் சென்றான்; அவர் திருவடிகளில் விழுந்து தஞ்சமடைந்தான்.

புத்தர் அசாதசத்துருவின் மனமாற்றத்தை அறிந்தார்; அவனை மன்னித்தார்; அவன் பிணியைப் போக்கினார்.

அசாதசத்துரு புத்தரைத் தன் தலையாய குருவாக ஏற்று வணங்கினான்; வஞ்சகத் தேவதத்தனை உடனடியாக நாடு கடத்தினான்.

நாடு கடத்தப்பட்ட தேவதத்தன், அப்பொழுதும் தனது கொடிய செயலைக் கைவிடவில்லை. நேராகப் புத்தரிடம் சென்றான்; தான் செய்த குற்றங் குறைகளையும், தீய செயல்களையும் பொறுத்துத் தன்னை மன்னித்தருளுமாறு வேண்டினான்; தன் கைகளால் புத்தரின் திருவடிகளைத் தழுவப் போனான்.

புத்தர், அவன் தன் கைகளில் நஞ்சினைத் தடவி வந்திருப்பதை அறிந்தார். ஆகவே, அவன் தன்னைத் தொடாதவாறு ஓர் அடி பின்னால் நகர்ந்தார்.

அப்பொழுது தேவதத்தன் இருந்த இடத்தில் நிலம் திடும் என இரண்டாகப் பிளந்தது ! அவன் அதில் வீழ்ந்து மறைந்தான் !

சீடர்கள் புத்தரின் முன்னுணர்வை அறிந்து வியந்தனர்; வஞ்சகத் தேவதத்தன் மறைந்தொழிந்தது அறிந்து மகிழ்ந்தனர்; ‘புத்தர் வாழ்க’ எனப் போற்றினர்.

வைகாசித்திங்கள் பௌர்ணமி நாளன்று அசோக மரத்தடியில் சித்தார்த்தனாகப் பிறந்து, அதே வைகாசித் திங்கள் பௌர்ணமி நாளன்று அரசமரத் தடியில் அறிவொளி பெற்றுப் புத்தரான இத்தகைய அருளாளர், இவ்வுலகினில் எண்பதாண்டுகள் இனிது வாழ்ந்து, அதே வைகாசிப் பௌர்ணமியன்று சால மரத்தடியில் தம் உயிர் நீத்தார் !

---

# 2. வேடனும் அந்தணனும்

**திருப்புத்தூர்** என்பது இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். அதுபாண்டி நாட்டிலுள்ள சிவத் தலங்களுள் ஒன்ருகும். அங்கு அந்தணன் ஒருவன் வாழ்ந்து வந்தான்.

அவனுடைய மாமனுர் பாண்டி நாட்டுத் தலை நகரான **மதுரை** மாநகரில் வாழ்ந்து வந்தார். ஒரு நாள் அந்தணன் தனது மாமனுர் வீட்டிற்குச் செல்லக் கருதினுன்; தன் மனைவியுடனும் கைக் குழந்தையுடனும் மதுரை நோக்கிப் புறப்பட்டான்; காட்டு வழியே நடந்து சென்ருன்.

வழியில் அவன் மனைவி வழிநடந்ததால் மிகவும் களைப்புற்றிருந்தாள். தாகம் வேறு எடுத்தது. அதனுல் அவள் மிகவும் வருந்தினுள்.

அப்பொழுது சிறிது தொலைவிலே பெரிய ஆல மரம் ஒன்று தெரிந்தது. அங்கு அவளை அழைத்துச் சென்ருன்; அம்மரத்தின் நிழலிலே அவளைக் குழந்தையுடன் இருக்கச் செய்தான்; பிறகு, "நீ இங்கேயே இரு. நான் போய் நீர் தேடிக்கொண்டு வருகிறேன்" என்று தன் மனைவியிடம் கூறிவிட்டுச் சென்ருன்.

அந்தச் சமயத்தில் மரத்து நிழலில் இளைப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு வேடனெருவன் வந்தான். வந்தவன், அந்த ஆலமரத்தின் மற்ெருரு பக்கத்தில் ஒதுங்கி இருந்தான். அவன் கொடிய ஆண் சிங்கத்தைப் போலக் காட்சியளித்தான். அவனது இடக் கையில் வில் இருந்தது. வலக் கையில் இரத்தம் தோய்ந்த அம்பு இருந்தது. இடத் தோளில் அம்புப் புட்டில் விளங்கியது. அவன் கால்களில் செருப்பணிந்

திருந்தான் ; இடுப்பில் ஆடை யணிந்திருந்தான் ; உடைவாளும் செருகியிருந்தான்.

அப்பொழுது ஒரு பெருங்காற்று வீசியது. அந்த ஆலமரத்தில் நெடுநாட்களுக்கு முன் எவ்வாறோ ஓர் அம்பு சிக்கியிருந்தது. அந்த அம்பு அப்பொழுது



அடித்த பெருங்காற்றால் நழுவலாயிற்று. நழுவிய அந்த அம்பு, தற்செயலாய் அங்கே தங்கியிருந்த அந்தணன் மனைவியினது வயிற்றில் தைத்தது. உடனே அவள் இறந்து விட்டாள்!

நீர் கொண்டுவரச் சென்ற அந்தணன் நீருடன் திரும்பி வந்தான்; தன் மனைவியைக் கண்டான்; வயிற்றில் அம்பு தைத்திருப்பதையும், சுற்றிலும் இரத்தம் பெருகிக் கிடப்பதையும் பார்த்தான்; அம்பு தைத்த மயில் ஒன்று இறந்து கிடப்பதைப் போல

இறந்து கிடக்கும் மனைவியை எண்ணிக் கலங்கினான்; மனம் வருந்தினான்; அறிவு இழந்தான்; ஆருத்துயர் அடைந்தான்; அவளருகே சென்றான்; "என் உயிரே! உனக்கு இவ்வாறு நேரக் காரணம் என்ன?" என்று அலறினான்.

'பிறகு, பெண் கொலை புரிந்த பெரும் பழியை இக்காட்டில் யார் செய்திருக்கக் கூடும்?' என்று ஆராயலானான்; எண் திசையிலும் சுற்றிப் பார்த்தான்; அப்பொழுது வில்லேந்திய கையோடும், வேட்டையைக் குறித்துச் சிந்தித்த வண்ணம் இருக்கும் முகத்தோடும் கூடிய வேடனொருவன் அங்கு இருக்கக் கண்டான்; 'அவன்தான் என்மனைவியைக் கொன்றிருக்க வேண்டும்' என்று கருதினான்; உடனே அந்த வேடனைப் பார்த்து, "ஏனடா வேடா! நீதானே என் மனைவியைக் கொன்றவன்?" என்று உரத்துக் கேட்டான். அப்பொழுது அவன் கண்கள் நெருப்பைக் கக்கின. பற்கள் மின்னல் போல் மின்னின.

உடனே பாண்டிய அரசன்மீது ஆணையிட்டான்; தன் மனைவியின் பிணத்தைத் தன் முதுகின்மேல் போட்டுக்கொண்டான்; குழந்தையைத் தன் இடுப்பிலே அணைத்துக்கொண்டான். குழந்தை தாய்ப் பாலை விரும்பி அழுதது. அதைக் காணுந்தோறும் அவன் கண்ணீர் வழிய விம்மி விம்மி அழுதான். வேடனை ஒரு கையால் பிடித்துக்கொண்டு, அவனை வலிய அழைத்து விரைந்து நடந்தான்; மிகுந்த துயரத்துடன் மதுரையை அடைந்தான்.

அப்பொழுது மதுரை மாநகர அரண்மனையிலிருந்து **குலோத்துங்க பாண்டியன்** என்னும் அரசன் ஒருவன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான்.

மதுரையை அடைந்த அந்தணன் நேராக அரண்மனை வாயிலை அடைந்தான்; தான் பிடித்து வந்த வேடனை முன்னே நிறுத்தினன்; தன் மனைவியின் பிணத்தை எதிரில் கிடத்தினன்; தன் கைகளை மேலே உயர்த்திக் கொண்டான்; "நீதி நெறி தவருத பாண்டிய மன்னனே! செல்வச் சிறப்பு மிக்கவனே! திங்கள் மரபில் உதித்தவனே! இவ்வேடன் என் மனைவியைக் கொன்று விட்டான். அவனை நான் இங்கே கையோடு கொண்டுவந்துள்ளேன். 'அரசன் உறங்கினுல் கூட அவன் ஆணை நாட்டைக் காக்கும்' எனக் கூறக் கேட்டிருக்கிறேனே! இப்போது அவ்வாணை இவ்வேடன் செய்த கொலையைக் காவாது விட்டு விட்டது! இது முறையா? நீதியா? நேர்மையா?" என்று எல்லோர் காதிலும் விழும்படி உரத்துக் கூறிக் கண்ணீர் வழிய முறையிட்டான்.

உடனே வாயிலில் நின்றுகேட்டிருந்த அமைச்சர் முதலானோர் அரண்மனையுள் சென்றனர்; அரசன் முன் நின்றனர்; "அரசர் பெரும! நமது அரண்மனை வாயிலில் அந்தணன் ஒருவன், தன் மனைவியைக் கொன்றவனைக் கையோடு பிடித்து வந்து நிறுத்தியுள்ளான்; இறந்த மனைவியின் பிணத்தைக் கீழே கிடத்தியுள்ளான்; 'இது நீதியா? முறையா?' என முறையிட்டு நிற்கின்ருன்!" எனக் கூறினர்.

உடனே அரசன் வருத்தத்தோடு வெளியே வந்தான்; அந்தணனைப் பார்த்தான்: "உனது குறை யாது?" எனக் கேட்டான்.

அந்தணன் தனது முறையீட்டை விளக்கமாக விரித்துக் கூறினன்.

உடனே பாண்டியன் வேடனை நோக்கினான்; "நீ கொன்றது உண்மைதானா?" என்று கேட்டான்.

வேடன் அரசனை வணங்கினான்; "அரசே! நான் இளைப்பாறும் பொருட்டு அந்த ஆலமரத்தின் ஒரு பக்கத்து நிழலில் நின்றேன் என்பது, முழுக்க முழுக்க உண்மை. ஆனால், நான் இவளைக் கொல்லவில்லை' கொன்றவரையும் காணவில்லை!" என்று கூறினான்.

அமைச்சர்கள் திரும்பத் திரும்பக் கேட்டுப் பார்த்தனர். அப்பொழுதும் அவன் அதே மறுமொழியையே கூறினான்.

'அடித்து உதைத்துத் துன்புறுத்திக் கேட்கா விட்டால் இவன் உண்மையை உரைக்கமாட்டான்' எனக் கருதினர் அமைச்சர்கள். அதனால், அவனைப் பலவகையிலும் துன்புறுத்தலாயினர். அப்பொழுதும் அவன் முன் சொல்லியதனையே திரும்பத் திரும்பச் சொல்லலானான்; மேலும், "இன்னும் நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டியது தங்கள் கடமை!" என்றும் வேண்டினான்.

வேடனின் மனநிலையை உணர்ந்தான் அரசன்; அவனது முகத்தை நன்கு உற்றுப் பார்த்தான்; அவன் முகத்தில் கொலைக்குறிப்பு எதுவும் காணப்பெறவில்லை. மேலும், அவன் கூறியதையே திரும்பத் திரும்பக் கூறுவதைக் கண்டு அரசன் திகைத்தான். ஆயினும், உண்மை தெரியும் வரையில் அவனைக் காவலர் பார்வையில் இருக்கச் செய்தான்.

பிறகு அந்தணனைப்பார்த்து, "உன் மனைவியைக் கொன்றவனைக் கண்டுபிடித்து உன் கவலையை ஒழிப்பேன். நீ சென்று உன் மனைவிக்குச் செய்யவேண்டிய

இறுதிக் கடன்களை முடித்துவிட்டு வா!" என்று அவனை அனுப்பி வைத்தான்.

அந்தணன் ஈமக்கடனை முடித்துவந்து அரசன் முன் நின்றான். அரசன் அவனை அரண்மனையிலேயே இருக்கச் செய்தான்.

பிறகு அரசன் மீனாட்சியம்மை கோவிலுக்குச் சென்றான்; சோமசுந்தரக்கடவுள் திருமுன் நின்றான்; அவரை மனமார வணங்கினான்; "இறைவ! அந்தணன் மனைவி அம்பு தைத்துக்கொலையுண்டது வேடனாலா, பிறராலா என்பதை என்னால் அறிய முடியவில்லை. ஆகவே, தாங்கள் திருவருள் புரிந்து என் குறை தீர்த்து அருள் புரிய வேண்டும்!" என்று வேண்டினான்.

அப்பொழுது வானிலிருந்து ஓரொலி எழுந்தது. எழுந்த அவ்வொலி, "அரசே! இன்று இரவு நகரின் புறத்தே வணிகர் தெருவில் உள்ள வீடொன்றில் திருமணம் நடக்க விருக்கிறது. அங்கு நீ அந்தணனோடு வருக! உண்மை விளங்கும்!" என்று கூறியது.

உடனே அரசன் மாறுவேடம் பூண்டான்; அந்தணனை அழைத்துக் கொண்டு திருமணம் நடைபெற விருந்த வீட்டை அடைந்தான். இருவரும் அவ்வீட்டின் மூலையொன்றில் ஒதுங்கி நின்றிருந்தனர்.

அப்பொழுது யமனால் அனுப்பப் பெற்ற தூதுவர் இருவர் அங்கு வந்திருந்தனர். அவர்கள் இருவரும் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொண்டனர்.

அதனை அவ்வீட்டின் மூலையில் ஒதுங்கி இருந்த அரசனும் அந்தணனும் கேட்டனர்.

தூதுவர் இருவரில் ஒருவன், மற்றவனைப் பார்த்து, "இன்றைக்கு இம்மணமகன் உயிரை எவ்வாறு

கவர்வது? இவனுக்கு எவ்வித நோயும் இல்லையே?'' என்று கேட்டான்.

அதற்கு மற்றவன், ''அன்றொரு நாள், எவ்வித நோயும் இல்லாத அந்தணன் மனைவியின் உயிரை, ஆலமரத்தில் சிக்கியிருந்த அம்பை வீழ்த்திக் கவர்ந்தோம் அல்லவா? அதைப்போல இங்கும் ஒரு வழி செய்வோம்!'' என்றான்.

அதைக் கேட்ட அந்தணனின் உடல் சிறிது நடுக்க மெடுத்தது. அரசர் முகம் சிறிது கவலை யொழிந்து காணப்பட்டது.

''என்ன வழி?'' என்று கேட்டான் முன்னவன்.

''வெளியில் பசுமாடு கட்டப்பட்டிருக்கிறது. பார்த்தாயா?'' என்றான் பின்னவன்.

''ஆம்!'' என்றான் முன்னவன்.

''இது திருமண வீடு. இங்கே கொட்டுமேளம் கொட்டுவார்கள். அந்த ஆரவாரத்தைக் கேட்டால் பசுமாடு வெருளும்; கட்டியிருக்கும் கயிற்றை அறுத்துக் கொள்ளும்; இங்கும் அங்கும் வெருண்டு ஓடும். அப்பொழுது அதனை நாம் ஏவி, மணமகனை முட்டும் படி செய்வோம்'' என்றான் முன்னவன்.

''ஆம்; ஆம்! இது நல்ல வழிதான்; மணமகன் உயிரைக் கவர்வதற்கு ஏற்ற எளிய வழிதான்!'' என்றான் பின்னவன்.

இதைக் கேட்ட பாண்டிய அரசன் அந்தணனைப் பார்த்தான். அப்பார்வை, 'அந்தணரே! என்ன கூறுகிறீர்?' என்பது போல இருந்தது.

உடனே அந்தணன், ''நாம் இங்கு இறுதிவரை இருந்து பார்ப்போம். மணமகன் இந்த எம தூதர்கள்

கூறியபடி இறக்கிருனு என்று பார்ப்போம். அதன்படி மணமகன் இறந்தான் ஆனுல், என் மனைவியும் மரத்திலிருந்த அம்பு தைத்து இறந்தாள் என்பதும் உண்மை எனக் கொள்வோம்!'' என்ருன்.

சிறிது நேரத்தில் மணவொலி பேராரவாரத்துடன் முழங்கியது. அதனைக் கேட்ட பசு திடும் என வெருண்டு கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடிவந்து மணமகனை முட்டியது. மணமகன் பிணமகன் ஆனுன்! மணமுழக்கம் பிணமுழக்கம் ஆயிற்று!

அரசனும் அந்தணனும் உண்மை உணர்ந்தனர்; அரண்மனை மீண்டனர்.

அந்தணன் வேடன்மீது வீண்பழி சுமத்தியதை நினைந்தும், பாண்டிய அரசன்மீது குற்றம் சுமத்தியதை எண்ணியும் மிகவும் வருந்திஞன்.

அப்பொழுது அரசன் அந்தணனை அழைத்தான்; "நீ மீண்டும் மறுமணம் புரிந்து கொள்க!'' என்று கூறிஞன்; அதற்கு வேண்டிய பொருள்களையும் கொடுத்து அனுப்பிஞன்.

பிறகு, காவலர் பார்வையில் இருந்த வேடனை வரவழைத்தான்; "நான் உண்மை உணராமல், உனக்குப் பெருந்துன்பம் இழைத்து விட்டேன்; அதற்காக மிகவும் வருந்துகிறேன். நீ உத்தமன்; வாய்மை தவருதவன்! இதோ, இந்தப் பொருளைப் பெற்றுக்கொள்!'' என்று கூறிப் பெரும் பொருள் கொடுத்தனுப்பிஞன்.

வேடனும் அந்தணனும் அவரவர் வீடு சென்றனர்.

குலோத்துங்க பாண்டியன் இறைவனை வணங்கி அரசாட்சியை இனிது நடத்திவரலாஞன்!

# 3. தாயும் சேயும்

**பாஞ்சாலங்குறிச்சி** என்பது **திருநெல்வேலி** மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். அங்கு **வீரபாண்டியக் கட்டபொம்மன்** என்பவன் கோட்டை அமைத்து வாழ்ந்து வந்தான். அவனது ஆட்சிக்கு உட்பட்டுப் பல பாளையங்கள் இருந்தன. அப்பொழுது ஆங்கிலக் கம்பெனியின் ஆட்சி நடைபெற்று வந்தது. அங்கங்கே இருந்த சிற்றரசர் எல்லோரும் அவர்கட்குக் கப்பம் செலுத்தித் தத்தம் நாட்டை ஆண்டு வந்தனர்.

ஆனல், வீரபாண்டியக் கட்டபொம்மன் மட்டும் அவ்வாறு கப்பம் கட்டி வாழ விரும்பவில்லை. அதனல், ஆங்கிலக் கம்பெனியாருக்கும் அவனுக்கும் பெரும் போர் நடைபெற்றது. அப்போரில் கட்டபொம்மன் வீரத்தோடு போர் புரிந்தான்; ஆயினும், இறுதியில் அவர்கள் கையில் அகப்பட்டான். அவர்கள் அவனைத் தூக்கிலிட்டுக் கொன்றனர்.

அவனுக்குத் தம்பி ஒருவன் இருந்தான். அவன பெயர் **ஊமைத்துரை** என்பதாகும். அவனும் அவனைச் சார்ந்த சிலரும் அந்தப் போரில் தப்பி ஓடத் தலைப் பட்டனர். ஆத்திரங் கொண்ட ஆங்கிலக் கம்பெனி யைச் சேர்ந்தவர்கள், அவர்களைப் பிடித்துச் சென்று **பாளையங்கோட்டையில்** இருந்த சிறையில் அடைத் தனர்; சிறுமை பல புரிந்தனர்; பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையையும் இடித்துத் தகர்த்தனர்.

பாஞ்சாலங்குறிச்சியைச் சேர்ந்த மக்கள் நாட்டுப் பற்று மிக்கவர்கள்; தமது தலைவனிடம் பேரன்புடைய வர்கள்; வீரம் மிக்கவர்கள். அவர்கள் தங்கள் தலைவன்

தூக்கிலிடப்பட்டதையும், இளைய தலைவன் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதையும் அறிந்து ஒன்று கூடினர்; திட்டம் தீட்டினர்; மாறுவேடம் பூண்டனர்; பாளையங் கோட்டை சென்றனர்; சிறையில் இருந்த ஊமைத் துரை முதலியோரைத் தந்திரமாகச் சிறைமீட்டு வந்தனர்.

ஊமைத்துரை மகிழ்ச்சியோடு வெளிவந்தான். தன் நாட்டு மக்களைப் போற்றினன்; பாஞ்சாலங் குறிச்சியை அடைந்தான்; முடிசூடி அரசனானன்; உடனே ஆங்கிலேயரைக் கருவறுக்க வழி வகை தேடினன்; இடிந்த கோட்டையை மீண்டும் கட்டத் திட்டமிட்டான்.

ஆர்வம் மிகுந்த நாட்டு மக்கள் இரவு பகலாக இடைவிடாது முயற்சி செய்தனர்; ஆறே நாட்களில் கோட்டையொன்றை அமைத்தனர். அது முன்பு ஆங்கிலேயர்களால் இடித்துத் தகர்த்தெறியப்பட்ட கோட்டையைவிட உறுதியுடையதாய் அமைந் திருந்தது.

ஊமைத்துரை மகிழ்வடைந்தான். அவனது வீரர்கள் களிப்படைந்து விளங்கினர்; 'எப்பொழுது போர்?' என ஏங்கி எதிர்நோக்கி யிருந்தனர்.

ஆங்கிலேயர்கள் சிறையிலிருந்து தப்பியோடிய வர்களைப் பிடித்து ஒடுக்க எண்ணினர்; அதன் பொருட்டுப் பாஞ்சாலங்குறிச்சிக்குப் படையெடுத்து வந்தனர்; அங்கே புதியதாகக் கோட்டையொன்று எழும்பியிருப்பதைக் கண்டு வியந்தனர்; 'போர் புரிந்து வெல்வதற்குத் தக்க சமயமன்று' என்று கருதி, வந்த வழியே திரும்பிச் சென்றனர்.

மறுமுறை **ஆக்னியூ** என்ற படைத் தலைவன் பெரும் படையோடு பாஞ்சாலங்குறிச்சி நோக்கிப் புறப்பட்டான். அவனுடன் பீரங்கிகளும் புறப்பட்டன.

இருதிறத்தாரும் போர் புரிந்தனர்.

பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் கோட்டைக்குள் இருந்துகொண்டு, கோட்டைமீது ஏறிவந்த வெள்ளையரைக் குத்திக் கொன்றனர்.

இதனைக் கண்டனர் ஆங்கிலப் படையினர்; சிறிது நேரம் திகைத்து நின்றனர்; பின்னர், நச்சுப் புகையைக் கோட்டைக்குள் வீசி எறிந்தனர்.

கோட்டை முழுவதும் அப்புகை சூழ்ந்தது; உள்ளே இருந்த வீரர்கள் மூச்சுவிட முடியாமல் திணறினர்; சிலர் கீழே வீழ்ந்தனர்; பலர் உயிர் இழந்தனர். போரில் தோல்வி ஏற்பட்டது. இறந்தவர் போக எஞ்சியவர் கோட்டையை விட்டு வெளியேறி ஓடினர்.

ஆங்கில வீரர்கள் அவர்களை விடவில்லை. துரத்திச் சென்றனர்; துப்பாக்கியால் சுட்டனர். அப்படியும் சிலர் தப்பி ஓடினர். பின்னும் அவர்களைத் துரத்திச் சென்று பிடிக்க முயன்றனர் ஆங்கில வீரர்கள்.

இந்தச் சமயத்தில் கதிரவன் மேற்றிசையில் மறைந்தான். இருள் எங்கும் சூழ்ந்தது. அன்றையப் போரும் அத்துடன் முடிவுற்றது!

போர் நடந்த இடத்துக்கு அருகே ஒரு சிற்றூர் இருந்தது. **கக்கரம்பட்டி** என்பது அதன் பெயர். அங்கு வாழ்ந்து வந்த சில பெண்கள், போர்க் களத்திற்கு வந்தனர்; தங்கள் தங்களுடைய தந்தை,

கணவன், மகன் முதலியவர்களில் யாரேனும் மண் மீது வீழ்ந்து கிடக்கின்றனரோ என அறிய அவா வுற்றனர்; அதன் பொருட்டுப் பிணங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கலாயினர்.

அவ்வாறு பார்த்தவர்களுள் **முத்தம்மாள்** என்பவளும் ஒருத்தி ஆவாள். அவள், **சிவசங்கு** என்னும் பெயரையுடைய தன் மகனைத் தேடி வந்திருந்தாள்; அவன் குற்றுயிராய்க் கிடந்தால் எடுத்துச் சென்று காப்பாற்றலாம் என்ற கருத்துடன் அவனைத் தேட லானாள்; இவ்வாறு தேடிப் பார்த்துக்கொண்டு வரும் போது இடையிலே தன் மகன் காயம்பட்டுக் கிடப் பதைக் கண்டாள். அவள் மனம் பதைபதைத்தது. கண்கள் கலங்கின. "ஐயோ! மகனே! சிவசங்கு!" என்று அலறினாள்.

மண்மீது மயங்கிக் கிடந்த சிவசங்கு தாயின் அழுகுரல் கேட்டான்; ஆவலும் அன்பும் கனியக் கண்திறந்து அன்னையை நோக்கினான்! "அம்மா! வருந்தாதீர்கள்! நான் நாட்டுக்காகப் போர் செய்தேன்; அதன் விளைவாகக் குண்டுக் காயம் பெற்றேன். நான் இனிப் பிழைக்க மாட்டேன்; ஆகவே, நீங்கள் என்னைக் காப்பாற்றுவதில் கருத்து செலுத்த வேண்டாம். அதோ பாருங்கள், காயங் களுடன் கிடக்கிறார் 'சாமி!' அவரைக் காப்பாற்றுங் கள். இதுவே எனது கடைசி வேண்டுகோள். உங்க ளது தலையாய கடமையும் ஆகும்!" என்று அன்புடன் கூறினான். உடனே அவன் உயிர் அவனைவிட்டுப் பிரிந்து விட்டது!

முத்தம்மாள் தன் மகன் சிவசங்கு இறந்ததைக் கண்டாள் ; கண்ணீர் உகுத்தாள் ; மனங் கலங்கிக் கதறினுள் ; ஆயினும், சிறிது நேரத்தில் மனந் தேறினுள். அவனைத் தன் வீட்டுக்குத் தூக்கிச் செல்லும் எண்ணம் அவளுக்கு இல்லை. அதனுல், அவனை அங்கேயே போட்டுவிட்டு, அவனது வேண்டுகோளை நிறைவேற்ற முனைந்தாள். சற்றுத் தொலைவில் அவன் குறிப்பிட்ட ‘ சாமி ’ இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அந்தச் சாமி வேறு யாருமில்லை. ஊமைத்துரையேதான் ! அவரைப் பார்த்த அவள், “ ஐயோ ! சாமி ! உங்களுக்கும் இந்நிலை ஏற்பட்டு விட்டதே !” என்று மனங் கலங்கிக் கூறி அழுதாள்; பிறகு அவரைப் புரட்டிப் பார்த்தாள். உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. உடனே சில பெண்களின் ; உதவியோடு அவரைத் தூக்கிக்கொண்டு கக்கரம் பட்டிக்குச் சென்ருள் ; தனது இல்லத்தை அடைந்தாள். அங்கிருந்த கயிற்றுக் கட்டில் ஒன்றில் அவரைப் படுக்க வைத்தாள் ; காயங்களுக்கு மருந்திட்டாள் ; அவருக்கு வேண்டிய பணிவிடைகளை எல்லாம் உடனுக்குடன் செய்தாள் ; ஊமைத்துரை தன் வீட்டில் இருக்கும் செய்தியைத் தனக்கு மிகவும் வேண்டிய இரண்டொருவருக்கு மட்டும் தெரிவித்தாள் ; அவரை இரகசியமாகச் சிகிச்சை செய்து காப்பாற்றி வரலானுள்.

ஆங்கில வீரர்கள் தப்பியோடியவர்களை எல்லாம் விடாது பிடித்துவிட வேண்டும் எனப் பெரு முயற்சி செய்தனர் ; ஊமைத்துரை இறந்து விட்டாரா, தப்பி ஓடிவிட்டாரா என்பதை அறிந்துகொள்ளப் பேராவல் கொண்டு துடித்து நின்றனர். அவர்களுடைய படைத்

S—3

தலைவனும், 'இன்றிரவுக்குள் ஊமைத்துரையை உயிருடனே, பிணமாகவோ கொண்டுவரவேண்டும்' என்று கட்டளையிட்டிருந்தான். அதனால், வீரர்கள் விளக்கொளியுடன் போர் நடைபெற்ற இடத்திற்குச் சென்றனர்; களத்தில் கிடந்தவர்களைப் புரட்டிப் பார்த்தனர். அங்கு ஊமைத்துரையைக் காணவில்லை. உயிர் தப்பி ஓடிவிட்டாரே என அறிந்து ஏமாற்ற முற்றனர்; உடனே அருகில் இருந்த முத்தம்மாளின் ஊரான கக்கரம் பட்டிக்குச் சென்றனர்; அவ்வூரி லிருந்த வீடுகளி லெல்லாம் ஊமைத்துரை மறைத்து வைக்கப்பட்டுள்ளாரா எனத் தேடத் தொடங்கினர்.

முத்தம்மாள் இச்செய்தியை அறிந்தாள்; ஆபத்து வந்துவிட்டதே என அலறினள். ஆயினும், அவள் அஞ்சவில்லை. வீர மரபில் உதித்த அவள், எவ்வா றேனும் பகைவர் கையில் சிக்கிவிடாமல் ஊமைத் துரையைக் காப்பாற்ற வேண்டும் எனத் துணிவு கொண்டாள்; உடனே அதற்கான வழிதுறைகளை ஆராயலானள். திடும் என அவளுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. விரைந்து வீட்டுள் சென்றாள்; கட்டிலில் படுத்திருந்த ஊமைத்துரையின்மீது மஞ்சள்தோய்ந்த துணியொன்றினை எடுத்து வந்து போர்த்தினள்; பிறகு, தோட்டத்திற்குச் சென்றாள்; வேப்பிலையைக் கொத்துக் கொத்தாக ஒடித்து வந்தாள்; தன் வீட்டு வாயிற்படிக் கூரையில் செருகினள்; உடனே அக்கம் பக்கத்துக்குச் சென்றாள்; தனக்கு மிகவும் வேண்டிய இரண்டு மூன்று பெண்களைப் பார்த்தாள்; அவர்களைக் கையோடு அழைத்து வந்தாள்; அவர்களிடம் மறை வாகச் செய்தியைத் தெரிவித்தாள்.

அவர்கள் எல்லோரும் ஒன்று கூடினர் ; கூந்தலை அவிழ்த்துத் தொங்கவிட்டனர்; முத்தம்மாள் வீட்டின் முன் அமர்ந்தனர்; ஒப்பாரி வைத்து அழத் தொடங்கி விட்டனர். முத்தம்மாள் தன் மகன் சிவசங்குவை எண்ணி உண்மையிலேயே கண்ணீர் விட்டு அழ லானாள்.

தப்பியோடிய பாஞ்சை வீரர்களை ஒவ்வொரு வீடாகத் தேடிவந்த ஆங்கில வீரர்கள், அப்பொழுது முத்தம்மாள் வீட்டை அடைந்தனர்; அங்கு அழுகுரல் கேட்கவே சிறிது நின்றனர்; பக்கத்தில் நின்ற ஒருவ ரைப் பார்த்து, "இவர்கள் ஏன் அழுகிறார்கள்?" என்று கேட்டுப் பார்த்தனர். அவர் எதுவும் சொல்லத் தெரி யாமல் விழித்தார். இதனைப் பார்த்தாள் அழுதுகொண் டிருந்த பெண்களில் ஒருத்தி. அவள் மூக்கைச் சிந்திக்கொண்டும், கண்களிலிருந்து நீரை வழிய விட்டுக்கொண்டும் எழுந்து வந்து, ஆங்கில வீரர்கள் முன்நின்றாள். " இந்த வீட்டு அம்மாளுக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். அவன் அம்மை வார்த்து இறந்து விட்டான். அதற்காகத்தான் நாங்கள் கூடி அழுகிறோம் ; இழவடிக்கிறோம் !" என்று மிக உருக்கமாகக் கூறினாள்.

'அம்மை' என்று கேட்டதுதான் தாமதம் ! ஆங்கில வீரர்கள் திரும்பிக்கூடப் பாராமல் ஓட்டம் பிடிக்கலாயினர். அது ஒரு தொற்று நோய் என அவர்கள் நன்கறிந்திருந்தனர். அதனாலேயே அவ் வாறு ஓடினர்.

முத்தம்மாள் தன் தந்திரம் பலித்து விட்டதை எண்ணி மகிழ்ந்தாள். அவளுடைய அன்பினாலும்,

ஆதரவினாலும், தக்க சிகிச்சையினாலும் ஊமைத்துரை யினது உடம்பின் மீது இருந்த காயங்கள் நாளடை வில் ஆறலாயின. அவரது உடல் தேறி நன்னிலை அடைந்தது. ஊமைத்துரை அவளைத் தாயெனப் போற்றினார்; அவள் வாழ்த்தைப் பெற்று விடைபெற் றார்; திரும்பவும் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட வேண்டும் என்ற எண்ணத்துடன் எவருமறியா வகையில் அங்கிருந்து வெளியேறிச் சென்றார்.

சிறிது நாள் சென்ற பிறகு, ஆங்கில வீரர்கள் முத்தம்மாளின் தந்திரத்தால் ஊமைத்துரை தப்பி விட்டதை அறிந்தனர்; அவளது தந்திரத்தால் தாங் கள் ஏமாறியதை எண்ணி நாணினர்!

நாட்டு மக்கள் முத்தம்மாளின் தியாக சிந்தையை யும் நாட்டுப் பற்றையும் போற்றிப் புகழ்ந்தனர்!

---

# 4. பத்திரையும் சத்துகனும்

'மகத நாடு நீர்வளம் உடையது. அங்குள்ள நீர் நிலைகளில் செந்தாமரை மலர்கள், நெருப்புப்பற்றி எரிவனபோல் மலர்ந்திருக்கும். அந் நெருப்பிலிருந்து மேலெழுந்து கிளம்பும் புகையைப் போன்று, அம்மலர் களின் தேனைக் குடித்துக் களித்த கருநிற வண்டுக் கூட்டங்கள் மேலெழுந்து பறந்து ஆடிக்கொண் டிருக்கும்.'

'கடலும் கடல் சார்ந்த இடமும் ஆகிய நெய்தல் நிலப் பகுதியில் புலால் நாற்றம் வீசும். அந் நாற்றத்தை, வெள்ளிய இதழ்களை உடைய தாழை மலர்கள் மலர்ந்து நறுமணம் கமழ்ந்து போக்கும்.'

இவ்வாறு தமிழ் இலக்கியங்களில் போற்றப்படும் **மகத** நாட்டின் தலைநகரம் **இராசகிருகம்** என்பதாகும். **புத்தர்** வாழ்ந்த காலத்தில் அந்நகரம் மிகவும் சிறப் புற்று விளங்கியது. அதனை ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனது ஆட்சியில் பொருட்காப்பாளன்—அரச பண்டாரத்தைக் காப்பவன்—ஒருவன் இருந்தான். அவன் நனிபெருஞ் செல்வம் படைத்த சீமான் ஆவான். அவனும் அவன் மனைவியும் நீண்ட நாள் தவமிருந்து பெண்மகவொன்றினைப் பெற்றெடுத் தனர்; அம் மகவுக்குப் **பத்திரை** எனப் பெயரிட்டுச் சீருடன் வளர்த்து வந்தனர்.

பத்திரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து பன்னிரண்டு ஆண்டு நிரம்பிய மங்கைப் பருவத்தை எய்தினள்; அந் நகரத்துக் கன்னிப் பெண்களுள் மிகவும் சிறந்த கண்

கவர் கட்டழகியாய்த் திகழ்ந்தாள்; கல்வி கேள்வி களிற் சிறந்தவளாயும், நுண்ணறிவு நிரம்பியவளாயும் விளங்கினுள்; செல்வப் பெருக்கின் மிகுதியால் பெறக் கூடிய எல்லா இன்பங்களையும் பெற்று, மகிழ்ச்சியோடு காலங் கழித்து வந்தாள்.

அந் நகரத்தில் அரச புரோகிதன் ஒருவன் இருந்தான். அவனுக்குச் **சத்துகன்** என்னும் பெயருடைய மகன் ஒருவன் இருந்தான். அவன் உடல் வலிமையும், உறுதியான உள்ளமும் உடைய வன்; கட்டழகு மிக்கவன்; பதினறு ஆண்டு நிரம்பிய இளங்காளை. அவனுக்குச் **சத்துருகன், சாதுகன், காளன்** என்ற வேறு பெயர்களும் உண்டு.

சத்துகன் ஒருகால் தீய எண்ணங்கொண்டான்; களவுத் தொழில் செய்யத் துணிந்தான்; அதன் பொருட்டு வழியில் ஓரிடத்தே மறைந்திருந்தான்.

அப்பொழுது வழிப்போக்கர் சிலர் அவ்வழியே சென்றுகொண் டிருந்தனர். சத்துகன் அவர்களை வழிமறித்து நிறுத்தினுன்; அவர்களிடமிருந்து பொருள்களைக் கொள்ளை கொண்டான்; அவர்கள் கையிற் சிக்காமல் காற்ருய்ப் பறந்து எங்கோ ஓடி ஒளிந்து கொண்டான்.

பொருளைப் பறிகொடுத்த வழிப்போக்கர் அரச னிடம் சென்று முறையிட்டனர்.

அரசன், உடனே காவலர்களை ஏவி, அக் கள்வ ஞகிய சத்துகனைப் பிடித்துவர ஏற்பாடு செய்தான்.

அரசன் ஏவிய காவலர் அஞ்சா நெஞ்சினர்; உறுதி வாய்ந்த உடலினர்; வாள் ஏந்திய கையினர்;

விழித்த கண் இமைக்கு முன் மறைந்தோடும் வலிய கள்வரையும் பிடிக்கும் வல்லமை பெற்றவர். இத்தகைய காவலர் கடிது சென்று கள்வனைத் தேடிப் பிடித்தனர்; அவன் கைகளைப் பின்புறமாகக் கட்டி அரசன் முன் கொணர்ந்து நிறுத்தினர்.

அரசன், "அன்று அவனைச் சிறைச் சாலையில் வைத்திருந்து, மறுநாள் கொண்டுவருக!" என்று ஆணையிட்டான். மறுநாள் காவலர் அவனைச் சிறையினின்றும் கொணர்ந்து அரசவையில் நிறுத்தினர். அரசன் வழிப்போக்கரையும் கள்வனையும் நன்கு விசாரித்தறிந்து, கள்வனுக்குக் கொலைத் தண்டனை விதித்தான்.

இச் செய்தி நகரெங்கும் பரவிற்று. மக்கள் கள்வனைக் காணத் தத்தம் வீடுகளின் முன்னும், தெருக்கள் கூடுமிடங்களிலும் ஆவலோடு முன்னதாகவே வந்து ஒதுங்கி நின்றிருந்தனர். பத்திரை இயல்பாகவே தன் மாளிகையின் மேல் மாடியில் நின்று உலவிக் கொண்டிருந்தாள்.

காவலர், கள்வன் சத்துகனை அந் நகர்த் தெருக்களின் வழியே, புறநகரிலிருந்த கொலைக் களத்திற்கு அழைத்துச் சென்றுகொண் டிருந்தனர்.

அப்பொழுது கள்வனைக் கண்ட மக்கள் பலப் பலவாறு கூறி ஆரவாரித்தனர். 'வழிப்பறி செய்த கள்வன் இதோ வருகிறான்! இன்றோடு இவன் வாழ் நாள் முடிந்தது!" என்றனர் சிலர். 'எத்துணை இளம் வயதினனாய் இருக்கிறான்? இவனுக்கா இந்நிலை ஏற்பட வேண்டும்? அந்தோ! பாவம்!' என்று இரக்கப்பட்டனர் சிலர். "அடடே! இவன் நமது

நாட்டு அரச புரோகிதன் மகன் அல்லனே? இவனு வழிப்பறி செய்தான்? அப்படியாயின், இதுவும் வேண்டும்! இன்னும் வேண்டும்!'' என்று கூறினர் சிலர்.

இந்த ஆரவாரத்தினை யெல்லாம்கேட்டாள் மேல் மாடியில் இருந்த செல்வச் சீமானின் ஒரே மகளான பத்திரை. உடனே அவள் தெருவை உற்றுப் பார்த்தாள்; கட்டழகு மிக்க இளங்காளை ஒருவனைக் காவலர் அழைத்துவரக் கண்டாள்; ஈடும் எடுப்பும் அற்ற அவனுடைய பேரழகும், பெருந் தோற்றமும் அவள் உள்ளத்தைக் கவர்ந்தன. அவ் விளைஞனிடம் பேரிரக்கம் கொண்டாள். அன்பு பெருகியது. அவன் அழகில் மயங்கிய அவள் அவனைக் காப்பாற்றவும், அவனையே மணந்து கொள்ளவும் விரும்பினுள்.

உடனே தன் தந்தையிடம் ஓடினுள்; "அப்பா! அப்பா!'' என்று மிகுதியாகக் கொஞ்சினுள். மகளது கொஞ்சுதலைக் கண்ட தந்தை, "என்ன கண்ணே?'' என்று கேட்டார். "அதோ, கொலைக்களத்திற்கு ஒருவரைக் காவலர் அழைத்துச் செல்கிருர்கள். பேரழகுடைய அவரை நான் உறுதியாக மணம் புரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அவரைக் காப்பாற்றி எனக்கு மணம் புரிந்து வைக்க வேண்டும்!'' என்று வேண்டினுள்.

தன் ஒரே செல்வ மகளின் வேண்டுகோளைக் கேட்ட தந்தை சிறிது தயக்க முற்ருர். அவரது தயக்கத்தை அறிந்த பத்திரை, "அப்பா!'' மணந்தால் அவரையே மணப்பேன். இல்லாவிட்டால் உயிர் விட்டு விடுவேன். ஏன் அப்பா தயங்குகிறீர்கள்?

உடனே கொலைக்களத்திற்குச் சென்று அவனைக் காப்பாற்றுங்கள் அப்பா!'' என்று மன்றாடினாள்.

அருமை மகளின் மனநிலையினை அறிந்த தந்தை அவள்பால் கொண்டுள்ள பேரன்புப் பெருக்கினால், வேறு வழியின்றிக் கொலைக்களம் சென்றார்; காவலரைக் கண்டார்; பெரும் பொருள்களைக் கைக்கூலியாக அவர்களுக்குக் கொடுத்தார் ; கள்வனை விடுதலை செய்து மீட்டு வந்தார் ; அவனை நீராடச் செய்வித்தார் ; பட்டாடைகளை அணிந்து கொள்ளச் செய்தார் ; நகர மக்களுக்குக் கள்வன் என்று தெரியா வண்ணம் புதுக்கோலம் பல புனையச் செய்து, மணமகனாக ஆக்குவித்தார்; நல்ல நாள் ஒன்றில் நகரப் பெருமக்கள் பலரின் முன்னிலையில், தன் ஒரே மகளான பத்திரைக்கு அவனைத் திருமணம் செய்து வைத்தார்.

பத்திரை தான் விரும்பியவரையே கணவராகப் பெற்றதை எண்ணி மகிழ்ந்தாள்; தனது விருப்பத்தை நிறைவேற்றி வைத்த தந்தையை மிகவும் போற்றிப் புகழ்ந்தாள்.

சத்துகன் தன் மாமனார் இல்லத்திலேயே மனைவி பத்திரையுடன் சிறிது காலம் வாழ்ந்து வந்தான். தான் விரும்பியவரையே கணவராகப் பெற்ற பத்திரையும் அவனுடன் மிகவும் மகிழ்ந்து இருந்தாள். இருவரும் இல்வாழ்க்கையைச் சிறிது காலம் நலமுற நடத்தி வந்தனர்.

ஒருநாள் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஒன்று உண்டாயிற்று. பத்திரை தன் கணவரைப் பார்த்து, “ நீங்கள் என்னை மணந்து கொள்வதன்

முன்பு கள்வராக இருந்தீர்கள் அல்லவா ?" என்று விளையாட்டாகக் கேட்டாள்.

அதைச் சத்துகன் உண்மையாகவே அவள் தன்னை இகழ்வதாக எண்ணி மிக்க சினமுற்ருன். ஆயினும், அதனை அவன் வெளிக்காட்டிக் கொண்டான் இல்லை ! ஆனலும், அவன் மனம் மீண்டும் களவுத் தொழில் புரியவேண்டும் என்ற தீய எண்ணத்தையே நாடியது. அதனல், தன் மனைவி அணிந்திருக்கும் அணிகலன்களை எல்லாம் கவர்ந்து கொண்டு, அவளை விட்டு வெளியேற வேண்டும் என்று எண்ணுன். அந்த எண்ணத்தை எவ்வாறு நிறைவு செய்வது என்ற கவலையால் அவன் மிகவும் வாடியிருந்தான்.

அவனது தோற்றத்தைக் கண்ட பத்திரை "அன்பரே ! ஏன் வாட்டமாயிருக்கின்றீர்கள் ?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை. முன்பு ஒரு முறை வேண்டுதல் ஒன்று செய்துகொண்டிருந்தேன். அதனை எவ்வாறு நிறைவேற்றி முடிப்பது என்பது பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறேன். அதனல், சிறிது சோர்வாய் இருந்திருக்கக் கூடும்" என்று மறுமொழி பகன்ருன் சத்துகன்.

"என்ன வேண்டுதல் ? யாருக்குச் செய்தல் வேண்டும் ? எதன் பொருட்டு ?" என்று கேட்டாள் பத்திரை.

"நான் வழிப்பறி செய்து ஒளிந்துகொண்டு திரிந்தபோது, நகரக் காவலர் என்னைப் பிடித்தார்கள் அல்லவா ? அப்பொழுது நான் திரிந்த மலையின்

உச்சியில் தெய்வம் ஒன்று இருந்தது. நான் எவ்வித இடையூற்றுக்கும் ஆட்படாமல் விடுதலையானால், அத்தெய்வத்திற்குக் காணிக்கைச் செலுத்துவதாக வேண்டுதல் ஒன்றினைச்செய்து கொண்டேன். அது போல் நான் விடுதலையாகி விட்டேன். கொலை யுண்ணவிருந்த என்னைக் காப்பாற்றியது அத் தெய்வந்தான் என்று முழுக்க முழுக்க நம்புகிறேன். ஆகவே, அதற்கு எனது நேர்த்திக்கடனை எவ்வா றேனும் செய்துவிட வேண்டும் என்று விரும்பு கின்றேன் !'' என்று விடையிறுத் தான் சத்துகன்.

“ இவ்வளவுதானே ! செய்துவிட்டால் போகிறது ! இதற்கேன் கவலைப்பட வேண்டும் ?'' என்றாள் பத்திரை.

உடனே கரவுள்ளம் கொண்ட சத்துகன், “ அப் படியானால், நீயும் வா! நாம் இருவருமாகச் சென்று காணிக்கைச் செலுத்தி வழிபட்டு வருவோம்!'' என்று அவளையும் அழைத்தான்.

அவன் கூறியதை உண்மையென நம்பிய பத் திரை, அவனுடன் செல்வதற்கு உடன்பட்டாள்; தன் னிடமிருந்த விலையுயர்ந்த எல்லா அணிகலன்களையும் எடுத்து அணிந்து இயற்கையழகுக்கு மேல் செயற்கை யழகினையும் செய்து கொண்டாள்.

பிறகு, இருவரும் பூசைக்கு வேண்டிய பொருள் களை எடுத்துக்கொண்டு புறப்பட்டனர்; மலைமீது ஏறி அதன் உச்சிக்குச் சென்றனர்.

வீட்டை விட்டுப் புறப்பட்டதிலிருந்து சத்துகன் பத்திரையுடன் எதுவும் பேசினன் இல்லை. அதனால் பத்திரை அவன்மீது ஐயங்கொண்டாள். அந்த

ஐயம் அவளைச் சிறிது குழப்பம் அடையச் செய்தது அதனால் அவள் அச்சமுற்றிருந்தாள். ஆயினும், மலை யுச்சியை அடையும் வரை அதனை அவள் வெளிக் காட்டிக் கொண்டாள் இல்லை! அவனைப் பார்த்து, "தெய்வம் இருக்குமிடம் எங்கிருக்கிறது? இன்னும் எவ்வளவு தொலைவு செல்லவேண்டும்?" என்று கேட்டாள்.

"தெய்வம் எங்கும் இருக்கிறது! அதை அடைய வும் இனி நாம் நடக்க வேண்டியதில்லை! இதுதான் நான் உன்னை அழைத்து வந்த இடம்!" என்றான். சத்துகன்.

"எதற்கு?"

"அன்று என்னைக் கள்வன் என்று கூறினாய் அல்லவா?"

"ஆமாம்! அதற்கு இப்பொழுது என்ன?"

"அதற்கு இப்பொழுது என்னவா? அவ்வாறு கேட்டதற்காக உன்னை இப்போது கொல்லப் போகி றேன். முதலில் உனது நகைகளைக் கழற்றி ஒரு மூட்டையாகக் கட்டி வை. அதன் பிறகு உன் வழிபடு கடவுளை நினைத்துக்கொள்!" என்றான். சத்துகன்.

அவனது கருத்தை உணர்ந்த பத்திரை, "நான் இதுகாறும் தங்களுக்கு எவ்விதத் தீமையும் இழைத்த தில்லையே! பிறகு ஏன் என்னைக் கொல்லப் போகிறீர் கள்?" என்று கேட்டாள்.

"தீமை புரிந்தால்தான் கொல்ல வேண்டுமோ? கள்வன் என்று கூறினையே, அந்த ஒன்றே போதாதோ? அதைவிட வேறு ஏதேனும் தீமைபுரிய வேண்டுமா?" என்று கேட்டான் சத்துகன்.

" என்னை மணப்பதன் முன் தங்கள் நிலை அது தானே ! அதனால் விளையாட்டுக்காகக் 'கள்வர்' என்று கூறிவிட்டேன். தவருனல், என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் அவ்வாறு கூறமாட்டேன்!" என்று கெஞ்சினுள் பத்திரை.

ஈவு இரக்கமற்ற சத்துகன், " அதெல்லாம் முடியாது. உன்னைக் கொன்று உன் நகைகளைக் கவர்ந்து செல்லவே, நான் உன்னை இங்கு அழைத்து வந்தேன். பூசனை செய்ய வரவில்லை. உம்...நகை களைக் கழற்றி வை !" என்று கடுகடுத்த முகத்தோடு வெடுவெடுத்தக் குரலில் கூறினுன்.

உடனே பத்திரை அவனை நோக்கி, "நான் அணிந்துள்ள இந்த அணிகலன்கள் மட்டுமா தங்க ளுக்கு வேண்டும் ? நானும் தங்களுக்கு உரியவள் தானே? நான் வேண்டாமா ?" என்று அன்பு தவழக் கேட்டாள்.

அச்சொற்களை அவன் காதில் வாங்கிக் கொள்ள வில்லை. அவளைக் கொன்று அவள் அணிந்துள்ள நகைகளைக் கவர்ந்து செல்லவே நினைத்தான்.

பத்திரை அவன் நிலையினை நன்கு அறிந்து கொண்டாள்; இனி அவனிடம் அறிவுரை கூறிப் பயனில்லை எனக் கருதினுள்; அவனைக் கூர்ந்து பார்த் தாள். அவனிடம் யாதொரு கொலைக் கருவியும் இருக்கவில்லை. ஆகவே, அவன் தன்னை இம் மலை யுச்சியினின்றும் கீழே தள்ளிக் கொல்லவே போகிருன் எனக் கருதினுள்; அதனின்றும் தப்ப வழி என்ன என்று சிந்திக்கலானுள். அவள் தன் நுண்ணறிவைப் பயன்படுத்தினுள். அப்பொழுது, ' தற் கொல்லியை

முற் கொல்ல வேண்டும்' என்ற பழமொழி அவளது நினைவுக்கு வந்தது. அதன்படி அவன் தன்னைக் கொல்வதன்முன் தான் அவனைக் கொன்றுவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள். அந்நிலையில் அவள் முகம்வாட்டம் நீங்கித் தெளிவு பெற்றிருந்தது.

உடனே அவள் தன் கணவனைப் பார்த்தாள்; அவன் கட்டளைக்கு அடங்கி நடப்பவள்போல் நடித்தாள்; ஒவ்வொரு நகையாகக் கழற்றியவாறே, "அன்பரே! கற்புடைய பெண்களுக்குக் கணவனே கண் கண்ட தெய்வம். நான் தங்களைக் கணவராக ஏற்றுக் கொண்டது முதல், தங்களையே கண் கண்ட வழிபடு தெய்வமாகக் கொண்டுள்ளேன். ஆதலால், நான் தங்களைச் சுற்றி வலம் வந்து பணிய விரும்புகின்றேன். அதற்குத் தாங்கள் இசைவு தரல் வேண்டும். அதன் பிறகு தங்கள் விருப்பம்போல் என்னைக் கொன்று விடுங்கள்!" என்று பணிவுடன் வேண்டினாள்.

சத்துகன் அதற்கு இசைந்தான்.

உடனே பத்திரை அவனை வலம் வருவதுபோல் நடித்து, அவன் பின் சென்றாள்; எதிர்பாராத வகையில் திடும் என அவனைக் கீழே தள்ளினாள். மலையுச்சியிலிருந்து கீழே விழுந்த சத்துகன் உயிர் துறந்தான்!

அப்பொழுது மலைவாழ் தெய்வம் ஒன்று, "எல்லா இடங்களிலும் ஆடவர்தாம் அறிவுடையவர்களாக இருக்கிறார்கள் என்பதில்லை! சில சமயங்களில் சூழ்ச்சி மிக்க பெண்டிரும் தங்களது அறிவை வெளிப்படுத்துவது உண்டு!" என்று கூறி, பத்திரையின் நுண்ணறிவினைப் பாராட்டி மகிழ்ந்தது.

தன் கணவன் 'ஓ'வெனக் கதறிக் கொண்டு விழுந்ததைக் கண்ட பத்திரை, மிகவும் பதைப்புற்ருள்; தனது பிற்கால வாழ்க்கையைப்பற்றிச் சிந்திக்கலானுள்; 'கணவனேயே கொன்றவள்!' எனக் கூறிப் பலரும் பழிப்பார்களே எனக் கருதினுள்; 'அவன் தன்னைக் கொலை செய்ய முனைந்தான் என்ருல், அதனை யாரும் ஏற்கவோ, நம்பவோ மாட்டார்களே! பொய்ப் பழி சுமத்துகிருள் என்று தூற்றுவார்களே!' என எண்ணினுள்; சாவினின்றும் காப்பாற்றிக் கணவனுக ஏற்றுக்கொண்ட அவனைத் தானே சாக்காட்டுக்கு அனுப்ப நேர்ந்ததை எண்ணி மனம் பதறினுள்.

இந்நிலையில் அவள் தன் தந்தையிடம் செல்ல விரும்பினுள் இல்லை! இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டாள்; நேராக மலையினின்றும் இறங்கினுள்; அடிவாரத்தை அடைந்தாள்; அங்கிருந்து மேலும் நடந்து சென்று ஒரு தோப்பினுள் புகுந்தாள்; அவ்விடத்தில் ஓர் ஆசிரமம் இருக்கக் கண்டாள்; அதனுள் நுழைந்தாள்; வெள்ளாடை உடுத்த உடலுடனும், மழித்த தலையுடனும் பெண்டிர் பலர் அங்கிருப்பதைப் பார்த்தாள்; அவர்கள் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள் என்றும், அவ்வாசிரமம் சமணப் பள்ளி என்றும் அறிந்துகொண்டாள்; தானும் அதில் சேர்ந்து துறவியாக விரும்பினுள்.

அவளது துணிவைக் கண்ட சமண சமயத்தவர்களாகிய **நிக்கந்தர்கள்** அவளைத் தங்கள் சமயத்தில் சேர்த்துக் கொண்டனர்; அம்மத வழக்கப்படி அவளது கூந்தலை நீக்கச் செய்தனர்; தூய வெள்ளாடையினைக் கொடுத்து உடுத்துக்கொள்ளச்

சொல்லினர். அன்று முதல் பத்திரை அங்கேயே தங்கி வரலானுள். சிறிது காலம் சென்ற பிறகு, அவளது மழித்த தலையில் மீண்டும் கூந்தல் வளர்ந்தது. அவ்வாறு வளர்ந்த கூந்தல் குண்டலங்களைப் போலச் சுருண்டு சுருண்டு விளங்கிற்று. ஆதலால், அச் சமணப் பள்ளியில் இருந்தவர்கள் அனைவரும் அவளைச் 'சுருண்ட கூந்தலை உடையவள்' எனப் பொருள்படும் '**குண்டலகேசி**' என்ற பெயரினையிட்டு அழைக்கலாயினர்.

சமண சமயத்தினைச் சார்ந்த குண்டலகேசி, அச் சமயத்தின் கொள்கை கோட்பாடுகளையும், சாத்திரங்களையும், சமய நூல்களையும் குறைந்த நாட்களுக்குள் ஐயம் திரிபின்றி நன்கு கற்றுத் தேர்ந்தாள்; பிறகு, அச் சமணப் பள்ளியைவிட்டு வெளியேறினுள்; ஊரூராகச் சென்றுள்; பற்பல சமயங்களிலும் வல்லாரைக் கண்டாள்; அவர்களுடைய சமயக் கொள்கைகளைக் கேட்டு உணர்ந்தாள்; பின்பு, சமயச் சொற்போர் புரியப் புறப்பட்டாள்.

அக்காலத்தில் சமயச் சொற்போர் புரிய விழைபவர், தமது கருத்தை நாட்டு மக்களுக்கு உணர்த்தும் பொருட்டு, ஊர் நடுவே மணலைக் கூட்டி மேடாக்குவர்; அதில் நாவல் மரக் கிளை ஒன்றினை நட்டு வைப்பார். அவ்வாறு நட்டு வைத்த மரக் கிளையினை யாரேனும் தள்ளிவிட்டால், தள்ளி விட்டவர் நட்டு வைத்தவருடன் சமயச் சொற்போர் புரிய உடன்பட்டார் என்று கொள்வர்.

இவ் வழக்கப்படி குண்டலகேசி நாவல் மரக் கிளை ஒன்ருேடு ஊர்தோறும் சென்ருள். சென்றவள்,

ஒவ்வோர் ஊரிலும் நாவல் மரக்கிளையை நட்டு வைத்தாள் ; தன்னுடன் சமயச் சொற்போர் புரிய வருபவர் உள்ளனரா என்பதை அறியும் பொருட்டு ஒரு கிழமை வரை ஒவ்வோர் ஊரிலும் காத்திருந்தாள். யாரும் அக் குறிப்பிட்ட காலம் வரை வாராது போனதால், அங்கிருந்து அடுத்த ஊர் செல்லலானாள்.

இவ்வாறு ஊர் ஊராகச் சென்று கொண்டிருந்த குண்டலகேசி இறுதியில் **சிராவத்தி** என்னும் நகரை அடைந்தாள் ; அந்நகர் நடுவில் வழக்கம்போல் மணல்மேடு கூட்டினாள் ; அதில் தான் கொண்டு வந்திருந்த நாவல் மரக்கிளையினை நட்டு வைத்தாள் ; பிறகு, உணவு பெற்று உண்ணும் பொருட்டு அந்நகர வீடுகள் தோறும் சென்றாள்.

அப்பொழுது அருளாளராகிய புத்தர் பெருமான் சிராவத்தி நகரத்துக்கு அருகே இருந்த **சேதவனத்துப்** பள்ளியில் தங்கியிருந்தார். அவருடன் அவருடைய மாணவர்களும் தங்கியிருந்தனர்.

அம் மாணவர்களுள் தலைசிறந்தவர் **சாரிபுத்தர்** என்பவராவர். அவர் பிச்சை ஏற்கும் பொருட்டு அன்று சிராவத்தி நகருக்கு வந்தார். வந்தவர், நகர் நடுவே மணல் மேட்டில் நாவல் மரக்கிளை ஒன்று நடப்பட்டிருப்பதைக் கண்டார் ; அருகே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை அணுகினார் ; அவர்களிடம், “ இக் கிளை இங்கு நடப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன ?” என்று கேட்டார்.

அச் சிறுவர்கள், குண்டலகேசி என்பவள் அறைகூவல் விட்டு அதனை நட்டிருப்பதாகவும், தற்போது

உணவு பெற்று உண்ணும் பொருட்டு நகருக்குள் சென்றிருப்பதாகவும் கூறினர்.

அதன் முழு விவரத்தையும் நன்கு அறிந்து கொண்ட சாரிபுத்தர், அச் சிறுவர்களைக் கொண்டே அதனைப் பிடுங்கி எறியுமாறு கூறினுர்.

சிறுவர்கள் முதலில் அஞ்சினர். சாரிபுத்தர் அவர்களைத் தேற்றினுர் ; தாம் அவளோடு வாதம் புரியப் போவதாக உறுதி கூறி, அதனைப் பிடுங்கி எறியுமாறு அவர்களை வேண்டினுர். சிறுவர்களும் அவரது வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தனர்.

நகரத்திற்குள் பிச்சை ஏற்கும் பொருட்டுச் சென்றிருந்த குண்டலகேசி, உணவுபெற்று உண்டு திரும்பி வந்தாள் ; கிளை பிடுங்கி எறியப்பட்டுக் கீழே கிடப்பதைக் கண்டாள் ; வியப்படைந்தாள் ; அங்கே இருந்தவர்களிடம்; “ இக் கிளை கீழே கிடக்கக் காரணம் என்ன ?” என்று கேட்டாள்.

அவர்கள், “ சாரிபுத்தர் என்பவரே சிறுவர்களை ஏவிப் பிடுங்கி எறியச் செய்தார் ” என்று கூறினர்.

இதைக் கேட்டதும் குண்டலகேசி மிக்க மகிழ்ச்சி அடைந்தாள். உடனே அவள் விரைந்து நகரினுள் சென்றுள் ; பெரியவர் பலரைப் பார்த்து, அவர்களிடம் செய்தியைக் கூறினுள் ; அவர்களை அழைத்துக் கொண்டு சாரிபுத்தரை அடைந்தாள்.

சாரிபுத்தர் அவர்களை மிக்க அன்புடன் வரவேற்றுர்.

பிறகு கற்றேர் அவையில் குண்டலகேசிக்கும் சாரிபுத்தருக்கும் இடையே சமயச் சொற்போர் நிகழ்ந்தது. போரின் முடிவில் குண்டலகேசி தோற்றுள்.

சாரிபுத்தர் தோல்வியுற்ற குண்டலகேசியினைத் தேற்றினார் ; அவளுக்குப் பௌத்த மத உண்மைகளை விளக்கிக் கூறினார்.




அவற்றை நன்கு அறிந்துகொண்ட குண்டலகேசி, தான் பௌத்தச் சங்கத்தில் சேரவிரும்புவதாகவும், புத்தர் பெருமானைக் காண விழைவதாகவும் சாரிபுத்தரிடம் கூறினாள்.

சாரிபுத்தர் அவளைத் தமது தலைவராகிய புத்தரிடம் அழைத்துச் சென்றார் ; அவளை அவர்க்கு அறிமுகப்படுத்தி, நிகழ்ந்த செய்தியைக் கூறினார். உடனே குண்டலகேசி புத்தர் பெருமானை வணங்கினாள்.

புத்தர் அவளுக்கு அறவுரை கூறினர் ; பிறகு, பிக்குணி மடத்திற்கு அனுப்பிப் பௌத்தத் துறவியாக்கினர்.

பௌத்தச் சங்கத்தில் சேர்ந்த குண்டலகேசி அம் மதக் கொள்கை கோட்பாடுகளையும், சாத்திரங்களையும், சமய நூற்களையும், அவற்றின் உண்மைகளையும் கசடறக் கற்றுத் தேர்ந்தாள் ; பேரும் புகழும் பெற்ருள் ; அங்கம், மகதம், காசி, கோசலம் முதலிய நாடுகளில் ஐம்பதாண்டுகள் வரை வாழ்ந்து, பௌத்த மதக் கருத்துக்களைப் பரப்பி வந்தாள் ! இறுதியில் வீடுபேறு அடைந்தாள் !

# 5. அரியநாதரும் சோதிடரும்

பண்டைத் தமிழகம் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, கொங்குநாடு, தொண்டைநாடு என ஐம்பெரும் பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. அவற்றுள் ஒன்ருன தொண்டை நன்னுடு சான்ருேர் பலரைப் பெற்றிருந்தது. அதன் தலைநகரம் வரலாற்றுச் சிறப்புடையதும், சமயம் கல்வி அரசியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கியதுமான காஞ்சிபுரமாகும். அந்நகருக்கு அருகே மெய்ப்பேடு என்னும் பெயருடைய சிற்றூர் ஒன்று உண்டு. அச் சிற்றூரில் **காளத்தியப்பர்** என்பவர் **சிவகாமி** என்னும் பெண்ணினல்லாரை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்று எளிய வாழ்க்கையை இனிது நடத்தி வந்தார். இவர்கள் இருவரும் ஆண்மகவொன்றினைப் பெற்றெடுத்தனர். அம்மகவு சிவந்த நிறத்துடனும், நல்ல உடற் கட்டுடனும், இனிய முகத்துடனும், கண்கவர் வனப்புடனும் விளங்கிற்று. பெற்ருேர் அம்மகவுக்கு **அரியநாதர்** எனப் பெயரிட்டுச் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தனர்.

அரியநாதர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து ஐந்தாண்டை எய்தினுர். அவ்வூரில் இருந்த அந்தணர் ஒருவரிடம் இலவசமாக எண்ணும் எழுத்தும் கற்று அறிவு வளர்ச்சி பெற்ருர். உடற் பயிற்சிக் கூடம் ஒன்றில் சேர்ந்து நெடுநாள் பயிற்சி பெற்று அக்கலைகளிலும் வல்லவர் ஆனுர்.

இவ்வாறு கல்வியறிவிலும், உடற் பயிற்சிக் கலைகளிலும் வல்லவராய்த் திகழ்ந்த அரியநாதர்க்குச்

சிலம்ப விளையாட்டில் மிக்க ஆர்வமும் ஈடுபாடும் உண்டு. ஒரு நாள் மாலை அவர் தன்னொத்த இளைஞர் சிலரை அழைத்துக்கொண்டு ஊருக்கு வெளியே சென்றார். சென்றவர், அவ்விளைஞரோடு சிலம்ப விளையாட்டினை ஆடிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அவ்வழியே அந்தணர் ஒருவர் வந்தார். அவர் சோதிடம், கைரேகை முதலியனவற்றைப் பார்த்துக் கணித்துக் கூறுவதில் வல்லவர் ஆவார். அவர், இளைஞர்கள் சிலம்பம் விளையாடுவதைக் கூர்ந்து பார்த்தார். அப்பொழுது அரியநாதர் மிகவும் ஊக்கத்துடன் கழியினைக் கொண்டு பற்பல முறைகளில் நன்கு விளையாடிக் கொண்டிருந்தார். அரியநாதரது விளையாட்டு இளைஞர்அனைவரினும்மேம்பட்டு விளங்கிற்று. அது அவ்வந்தணர் மனத்தைக் கவர்ந்தது. உடனே, அவர் அரியநாதரை அணுகினார்; "தம்பி! நான் உன் சிலம்ப விளையாட்டைக் கண்டேன். அதில் உன் கைத் திறமை போற்றுவதற்குரியதாய் அமைந்திருந்தது. எனக்குச் சிறிது கைரேகை பார்க்கத் தெரியும். ஆதலால், உனது கைரேகையையும் பார்க்க விரும்புகின்றேன். எங்கே, உனது கையைக் காட்டு, பார்க்கலாம்?" என்று கேட்டார்.

இதைக் கேட்ட அரியநாதர் முதலில் அவ்வந்தணர்க்கு வணக்கம் செலுத்தினார்; பிறகு, சிறிது நாணத்துடனும் அடக்க வொடுக்கத்துடனும் தம் கையைக் காட்டினார்.

கைரேகை பார்த்துக் கூறுவதில் வல்லவரான அந்தணர் அவர் கையை உற்றுப் பார்த்தார்; வியப்

புற்றார். அந்தணர் முகத்தையே கூர்ந்து கவனித்து வந்த அரியநாதர், அவரது வியப்பு, கணத்துக்குக் கணம் மாறுபட்ட வண்ணம் இருக்கக் கண்டார்.

அப்பொழுது அந்தணர் அரியநாதரை அன்புடன் நோக்கினர்; "தம்பீ! உனக்கு அரசபதவி ஒன்று மிக விரைவில் வரவிருக்கின்றது. அப்பொழுது நீ அரசரால் நன்கு மதிக்கவும் குடிமக்களால் நன்கு போற்றவும் பெறுவாய்! அவ்வாறு உன்னை மதிக்கும் அரசர் உனக்கு நாளடைவில் மிக உயர்ந்த பதவி களைத் தருவார். அதுகாலை உன்னால் அந்நாடு மிக்க சிறப்படையும். நாட்டு மக்கள் உன்னை மிகவும் போற்றிப் புகழ்வர். உனது பேரும் புகழும் என்றும் நின்று நிலைபெறும்!" என்று கூறினர்.

"ஐயா! மிக்க மகிழ்ச்சி! அதற்காக நான் என்ன செய்ய வேண்டும்?" என்று அந்தணரைப் பார்த்துக் கேட்டார் அரியநாதர்.

அந்தணர், "நீ இந்தச் சிற்றூரில் இருக்கக் கூடாது. உடனே விசயநகரம் செல்ல வேண்டும். அந்நகரத்தை அடைந்தவுடன் எப்படியேனும் அரசு வேலை ஒன்றினைத் தேடிக்கொண்டு, அங்கே இருக்க முனைய வேண்டும். அவ்வாறு ஏதேனும் ஒரு வேலை யினைத் தேடிக் கொண்டாயானல், மேலும் மேலும் உயர்வு பெறுவாய்! என் சோதிடம் என்றும் பொய்க்காது!" என்று மறுமொழி பகன்றார்.

"மிக்க மகிழ்ச்சி! இத்தகைய உதவி செய்த தங்களுக்கு ஏழையாகிய நான் என்ன கைம்மாறு செய்யப் போகின்றேன்!" என்று கூறி வருத்தமுற்றார் அரியநாதர்.

"தம்பீ! கவலைப்படாதே! இப்பொழுது நீ ஒன்றும் கைம்மாறு செய்யவேண்டாம். நீ நல்ல நிலைமையில் இருக்கும்போது நானோ, என்னைச் சார்ந்தவர்களோ உன்னிடம் வந்து இந்தச் செய்தியை நினைவூட்டுவோம். அப்பொழுது நன்றி மறவாது ஏதேனும் கொடுத்துதவினால் போதும்!" என்று கூறித் தேற்றினார் அந்தணர்.

"ஐயா! தாங்கள் கூறியதுபோல் யாவும் நடந்தால், நான் தங்களை ஒருபோதும் மறக்கமாட்டேன். அப்பொழுது உறுதியாக என் சொத்தில் காற்பகுதியைத் தங்கட்குத் தருவேன்!" என்றார் அரியநாதர்.

"தம்பீ! எல்லோரும் முதலில் இப்படித்தான் கூறுவார்கள். செல்வம் வந்து சேர்ந்த பிறகு எந்த மாந்தருடைய மனமும் மாறுதல் இயற்கை. அப்பொழுது யாரும் சொன்னபடி நடப்பதில்லை. இது உலக வழக்கம் ஆயிற்றே!" என்றார் அந்தணர்

"ஐயா! அவ்வாறெல்லாம் நான் நடக்கமாட்டேன். என் முன்னோர் சொன்னசொல் தவறாதவர்கள். நானும் அவ்வாறே நடப்பேன். ஆகவே, தாங்கள் என் வாக்குறுதியை முழுக்க முழுக்க நம்பலாம்!" என்று அழுத்தமாகக் கூறினார் அரியநாதர்.

சோதிடர் மகிழ்ந்தார்; ஆயினும், வாய்ச் சொல்லை எழுத்து வழியாகப் பெற விழைந்தார்; அதன் பொருட்டு, "தம்பீ! உன் வாக்குறுதியை ஓர் ஓலையில் எழுதிக்கொடு!" என்று கேட்டார்; பிறகு, எழுத்தாணியையும் ஓலையையும் அவரிடம் கொடுத்தார்.

உடனே அரியநாதர், "மெய்ப்பேட்டில் வாழும் அரியநாதனுகிய நான், சோதிடர் கூறியது போல அரசு வேலை பெற்றுச் செல்வ நிலையில் உயர்ந்து திகழும்போது, இவ்வோலையை என்னிடம் காட்டு பவர்க்கு, எனது சொத்தில் காற்பகுதியைத் தரு வேன் !" என்று எழுதிக் கையெழுத்திட்டார்; பிறகு, அதனை எழுத்தாணியோடு சோதிடரிடம் அன்புடன் திருப்பிக் கொடுத்தார்.

சோதிடர் மனக் களிப்புடன் ஓலையைப் பெற்றுக் கொண்டார்; பிறகு, "தம்பீ ! நீ இப்பொழுதே விசய நகரத்திற்குப் புறப்படு ! நற்பதவிகளைப் பெற்று நல முடன் வாழ்வாய் ! நான் வருகிறேன்" என்று கூறி விடை பெற்றுர்.

அப்பொழுது அரியநாதர், "ஐயா ! தாங்கள் யார் ? தங்கள் ஊர் எது ? தங்கள் பெயர் என்ன ? இவற்றுள் ஒன்றையும் தெரிவிக்கவில்லையே ! நான் அறியலாகாதோ ?" என்று கேட்டார்.

அந்தணர், "அவையெல்லாம் உனக்கெதற்கு ? இந்த ஓலையை யார் உன்னிடம் காட்டுகிறுர்களோ, அவரிடம் நீ வாக்குறுதி யளித்தபடி நடக்க வேண் டியதுதானே ?" என்று மறுமொழி கூறினுர்.

உடனே அங்கிருந்த இளைஞரில் குறும்புக்கார னுகிய ஒருவன், "தாம் கூறியது பொய்த்துப் போகு மானுல், தம்மை ஏளனம் செய்வார்களே என்னும் அச்சத்தினுலேயே அந்தணர் அவற்றைக் கூற நாணுகிறுர் போலும் !" என்றுன்.

அந்தணர், அவனது குறும்புப் பேச்சினைக் கேட்டும் பொறுமை இழந்தார் இல்லை; "உண்மை பிறகு வெளிப்படும் !" என்று அமைதியாகக் கூறினுர்.

உடனே வேறோர் இளைஞன் அவரைப் பார்த்து, ‘ஐயா! தங்கள் கூற்று உண்மையானால், அரிய நாதர் தமது சொத்தில் காற்பகுதி தருவதாக ஒப்புக் கொண்டு எழுதிக் கொடுத்திருக்கிறார். தங்கள் கூற்றுப் பொய்த்து விடுமானால், தாங்கள் என்ன தருவீர்கள் என்று சொல்லவில்லையே?’’ என்று குறும் பாகக் கேட்டான்.

அந்தணர் நகைத்து, “ நான் வறியவன். என் கூற்றுப் பொய்க்குமானால், எனது வறுமை முழுவதையும் தருவேன். என்னால் வேறு என்ன தர இயலும்? உறுதியாக என் கூற்றுப் பொய்க்காது! பொய்த்துவிடும் என்றும் சிறிதும் ஐயமடைய வேண்டாம் !’’ என்று வேடிக்கையாய்க் கூறி, அவர் களிடம் விடைபெற்றுச் சென்றார்.

அந்தணர் சென்றதும் அரியநாதர் வீட்டை அடைந்தார் ; பெற்றோரைக் கண்டார் ; அவர்களிடம் சோதிடர் கூறியவற்றை எடுத்துரைத்தார்.

பெற்றோர் அரியநாதரை நெடுந்தொலைவிலுள்ள விசயநகரத்திற்கு அனுப்ப விரும்பவில்லை. அதனால், “ அரியநாதா ! நீ எங்கட்கு ஒரே மகன். உன்னை நாங்கள் தவமிருந்து பெற்றோம் ; எங்கள் உயிர் போலக் கருதி வளர்த்து வருகிறோம். இந்நிலையில் நாங்கள் உன்னைப் பிரிந்து வாழ எவ்வாறு இசை வோம் ?’’ என்று கூறி வருந்தினர்.

அரியநாதர் தம் பெற்றோர்க்கு ஆறுதல் கூறிப் பார்த்தார். அவர்கள் அப்பொழுதும் அவரை அனுப்பத் துணிவு கொள்ளவில்லை. ஆதலால், அவர் நாளடைவில் தம் பெற்றோர் மனத்தை மாற்றி

YB
031,3(4)
N65



விடலாம் என்ற நம்பிக்கையோடு காலத்தை எதிர் பார்த்துச் சில நாள் பொறுத்திருந்தார். இவ்விடைப் பட்ட காலத்தில், விசயநகரம் சென்றால் தெலுங்கு மொழி தெரிந்திருக்க வேண்டும் என்று கேள்வியுற்று, அதனை விரைவில் கற்றுத் தேர்ந்தார்.

இவ்வாறு இருக்கும் போது அவர் எதிர்பார்த் திருந்த சமயம் வந்துற்றது. அப்பொழுது அவர் தம் பெற்றோர் மகிழ்ந்திருந்தனர். அதுகாலை அரியநாதர் அவர்களை அணுகி, அடக்க வொடுக்கத்தோடு பணிந்து நின்றார்; "என் அருமைத் தாய் தந்தை யரே! நான் உங்களுடன் இங்கிருந்து என்ன பயன்? வறுமையில்தானே உழல வேண்டும்? நான் சோதிடர் கூறியபடி விசயநகரம் சென்று ஏதேனும் ஒரு வேலையைத் தேடிக்கொண்டேனானால், அப் பொழுது நானும் நலம் பெறுவேன். என்னுடன் நீங்களும் நலமுறுவீர்கள். ஆகவே, எனக்கு மனமுவந்து விடை யளிக்க வேண்டுகின்றேன்!" என்று உருக்கமாக உரைத்தார்.

86600

அவரது உருக்க உரை கேட்ட பெற்றோர் உள்ளம் கரைந்தனர்; கண் கலங்கினர்; ஆயினும் ஒருவாறு தேறுதல் அடைந்து, வருத்தமும் மகிழ்வும் அவர்கள் மனத்தில் போராட்டம் புரிய, அவரது விருப்பத்துக்கு உடன்பட்டனர்.

பெற்றோருடைய உடன்பாட்டைப் பெற்ற அரிய நாதர், அகமும் முகமும் மலர அவர்களை வணங்கி விடை பெற்றார். அந்நிலை கண்டு சிறிது ஆறுதலுற்ற அவர்தம் பெற்றோர் அவர்க்குச் சிறிது சோறும்

பணமும் கொடுத்து, வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

பதினறு வயது நிரம்பிய அரியநாதர் பெற்ருேர் அளித்தக்கட்டுச் சோற்றுடனும், சிறிய பணத்துடனும் மெய்ப்பேட்டை விட்டுப் புறப்பட்டார்; வழியில் பல நாள் நடந்தார்; துயர் பல அடைந்தார்; இறுதியில் விசயநகரத்தை எய்தினர். அப்பொழுது வெற்றித் திருநகராகிய அவ் **விசயநகரத்தில்** பேரரசர் **கிருட்டினதேவராயருடைய** ஆட்சி நடந்துகொண்டிருந்தது.

கிருட்டினதேவராயர் அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய அரசர்க்குரிய பண்புகள் அனைத்தும் எஞ்சாமல் வாய்க்கப் பெற்றவர்; ஆண்டாள் வரலாற்றை **'ஆமுக்த மால்யதா'** என்னும் பெயருடைய நூலாக எழுதிய சிறந்த புலவர்; புலவர் எண்மரைத் தமது அவையில் வைத்துப் புரந்தவர்; வெற்றி வீரர்.

அவரது ஆட்சி நேர்மையாக நடைபெற உதவியவர்கள் **திம்மரசு** என்ற **அப்பாஜி** என்னும் அமைச்சரும், **நாகமர்** என்னும் படைத் தலைவரும் ஆவர்.

படைத் தலைவர் நாகமர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர்; உடற் கட்டும், ஈடும் எடுப்பும் அற்ற தோற்றமும் உடையவர்; சிறந்த போர் வீரர்; பட்டறிவு பல பெற்றவர்; மிகச் சிறந்த அரசியல் வல்லுநர்; தென்னுட்டின் மகா மண்டலேசுவரராகத் திகழ்ந்தவர்.

இத்தகு சிறப்புடைய நாகமரது புகழை அரியநாதர் முன்னரே கேள்விப்பட்டிருந்தார். ஆதலால், விசயநகர மடைந்த அவர், நாகமரின் இல்லம்

எங்கிருக்கிறது என உசாவி அறிந்து, அங்கே சென்று அவரைக் கண்டார்; அவரிடம் தமது நிலையைத் தெலுங்கு மொழியிலேயே எடுத்துரைத்தார்.

அரியநாதரது துன்ப நிலையினை அறிந்த நாகமர், அவர்பால் மிக்க இரக்கம் கொண்டார்; அவரது கவர்ச்சி மிக்க முகமலர்ச்சி கண்டு மகிழ்ந்தார்; அவர் சுந்தரத் தெலுங்கு மொழியில் செப்பியவற்றைக் கேட்டு வியப்படைந்தார்; முடிவில் அவர்க்குக் கணக்கர் வேலை அளித்துத் தம்மிடமே வைத்துக் கொண்டார்.

நாகமரிடம் கணக்கராக அமர்ந்த அரியநாதர் தமது வேலையை ஒழுங்குறச்செய்து நல்ல பெயர் பெற்றார். அவரது திறமறிந்த நாகமர் அவர்பால் மிக்க அன்பும், அளவற்ற நம்பிக்கையும் கொண்டார்.

அப்பொழுது நாகமரின் மகன் **விசுவநாதன்** என்பவன் பேரரசர் கிருட்டினதேவராயரிடம் அடைப்பைக் காரனாக வேலை பார்த்து வந்தான். அரியநாதர் அவனிடம் மிக்க அன்புகொண்டிருந்தார்.

ஒரு நாள் விசுவநாதன் அரியநாதரை அழைத்துச் சென்று தமது அரசர் இராயரிடம் அறிமுகப் படுத்தி வைத்தான்.

இராயர் சமயம் வாய்க்கும் போதெல்லாம் அரியநாதரின் கணக்குப் புலமையைச் சோதித்து அறிந்து வந்தார். அரியநாதர் ஒவ்வொரு சோதனையிலும் தவறுதல் இன்றி நடந்துகொண்டார். ஆகவே, இராயர் அவரை மிகவும் விரும்பினர்; தமது அரண்மனைக் கணக்கராக அமர்த்தினர்; பிறகு தலைமைக் கணக்கராகவும், அரசின் பெருங் கணக்கராகவும் ஆக்கினர்.

விசயநகர அரசின் முதற் கணக்கராக அரிய நாதர் இருந்து வரும்போது, வடநாட்டில் இருந்து மற்போர் வீரன் ஒருவன் விசயநகரம் வந்தான்; அரசவையில் இருந்த இராயரைக் கண்டான்; "என்னை மற்போரில் வெல்வார் இந்நாட்டில் யாரேனும் உளரோ?" என அறைகூவல் விட்டான். அரசவையில் இருந்த யாவரும் அவனது தோற்றத்தைக் கண்டு அவனோடு போர் புரிய முன்வந்தாரில்லை. அரசர் கலங்கினர். அச்சமயம் அரியநாதர் எழுந்து, தான் போர் புரிவதாகக் கூறி முன்வந்தார்; அரசர் இசைவு பெற்று அவனுடன் மற்போர் புரிந்தார்; யாவரும் வியக்குமாறு வெற்றி பெற்று விசயநகரத்தின் வீரப் புகழை நிலைநாட்டினர். அரியநாதரது போர்த்திறத்தை நேரில் கண்ட இராயர் உடனே அவரைத் தமது நாட்டின் தளவாயாக—படைத்தலைவருள் ஒருவராக—ஆக்கினர்.

ஒரு சமயம், இராயர், தமது முன்னோர் காலத்தில் **இரெய்ச்சூர்** முதலான விசயநகரப் பகுதிகளைக் கவர்ந்துகொண்ட **பீசப்பூர்ச் சுல்தான்** மீது போர் தொடுத்தார். போர் இரெய்ச்சூரில் கடுமையாக நடந்து கொண்டிருந்தது. இராயரும் சுல்தானுமே நேருக்கு நேர் நின்று போர் புரிந்தனர். அப்பொழுது சுல்தான் பக்கத்துப் படைத்தலைவன் ஒருவன் இராயரின் பின்புறமாக வந்து அவரைத் தாக்கத் தொடங்கினன். இதனைக் களத்தின் பிறிதோர் இடத்தில் போரிட்டுக் கொண்டிருந்த அரியநாதர் அறிந்தார்; தமது அரசர் இராயருக்கு நேரவிருக்கும் பேரிடரினை உணர்ந்தார்; தம் படையுடன் விரைந்து சென்றார்; பகை நாட்டுப் படைத் தலைவனுடன் போரிட்டார். அப்பொழுது

தான் இராயர் தமக்கு நேரவிருந்த பேரிடரினையும், அதனைத் தடுக்கும் பொருட்டு அரியநாதர் திடீரெனத் தோன்றியதையும் அறிந்தார். போர் புரிந்துகொண்டிருந்த அரியநாதர் உடனே அப்பகை நாட்டுப் படைத்தலைவனைச் சிறை செய்து இராயர் முன் நிறுத்தினர்.

இராயர் அரியநாதரின் இச்செயல் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியுற்றுர்; தம்மைக் காப்பாற்றிய அப் பெருந்தகைத் தளவாயை மார்போடணைத்துத் தழுவிக்கொண்டார்; வாயார வாழ்த்துக்களைத் தெரிவித்தார்; '**முதலி**' என்ற சிறப்புப் பட்டத்தினை அளித்துத் தமது அமைச்சருள் ஒருவராக ஆக்கிக் கொண்டார்; பல்லக்கில் செல்லும் உரிமையையும் அவர்க்களித்துப் போற்றினர்.

பிறகு, இராயர் பாண்டிய நாட்டைக் கைப்பற்றினர்; நாகமர் மகன் விசுவநாதனை அரசனுகவும், அரியநாதரை அமைச்சராகவும் படைத்தலைவராகவும் நியமித்து மதுரைமாநகரிலிருந்து ஆட்சி புரிந்துவரச் செய்தார்.

இங்ஙனம் நாகமரின் கணக்கராகச் சேர்ந்து, விசயநகர அரசியல் வேலை பெற்றுப் படிப்படியாய் உயர்ந்து பாண்டிய நாட்டின் அமைச்சரான அரியநாதர், முதலில் அந்நாட்டில் நிலவிய குழப்ப நிலையைப் போக்கினர்; ஆக்கப் பணி பல புரிந்து அமைதியை நிலைநாட்டினர். அவருக்குப் பேரும் புகழும் உண்டாயின.

ஒரு நாள் அமைச்சர் அரியநாதர் மதுரை அரசவையில் அரசர் விசுவநாதருக்கு அருகில் இருந்து அரச காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது பழுப்பேறிய உடையினை உடுத்தவராயும், திருநீறணிந்த மேனியராயும், பழுத்த வைதிகராயும் தோற்றமளித்த அந்தணர் ஒருவர், அரண்மனை வாயிலை அடைந்தார்; வாயிற் காவலரை அணுகினர்; "நான் அரியநாதரைப் பார்க்க வந்திருக்கிறேன். அருள் கூர்ந்து அவரிடம், 'தங்களைக்காண அந்தணர் ஒருவர் வந்துள்ளார்' என்று கூறவேண்டுகிறேன்!" என்றார்.

காவலருள் ஒருவன் அரசவையுட் சென்றான்; சமயம் அறிந்து அரியநாதரைப் பணிந்தான்; அந்தணர் வரவைத் தெரிவித்தான். அரியநாதர் அவனிடம், அவரை உடனே அழைத்து வருமாறு கூறினர்.

காவலன் கூறியதைக் கேட்ட அந்தணர் விரைந்து உள்ளே சென்றார்; அமைச்சர் பெருமான் அரியநாதரைக் கண்டு தலைதாழ்த்தி வணங்கினர்.

அரியநாதர், அவரை, "வருக!" என வரவேற்றார்; பிறகு, "தாங்கள் என்னைக் காண வந்திருப்பதாகக் கேள்வியுற்றேன். தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் ?" என்று கேட்டார்.

"நான் மெய்ப்பேட்டிலிருந்து வருகின்றேன்!" என்று பதிலிறுத்தார் அந்தணர்.

அரியநாதர், "மெய்ப்பேட்டிலிருந்தா வருகின்றீர்கள்!" என்று வியப்புடன் கேட்டுப் புன்முறுவல் பூத்தார்; பிறகு தொடர்ந்து, "இவ்வேழை பிறந்த ஊரும் அதுதான். அங்கு அனைவரும் நலமாக இருக்கின்றார்களா ? ஊரில் மழை உண்டா ? ஊர் வளம் பெற்று நன்னிலையில் இருக்கின்றதா ?" என்று கேட்டார்.

அந்தணர், " அனைவரும் நலமாக உள்ளனர் ஊரில் மழை உண்டு. நன்னிலையிலும் இருக்கிறது. எல்லோரும் தங்களைப்பற்றியே எப்பொழுதும் புகழ்ந்த வண்ண மிருக்கிறார்கள் !" என்றார்.

பிறகு, அரியநாதர் அந்தணரைப் பார்த்து. " தாங்கள் யார் ? இங்கு வரக் காரணம் யாது ?" என்று கேட்டார்.

அந்தணர், " நான் மெய்ப்பேட்டினன் ; என் தந்தையாரை இளமையில் இழந்தவன் ; ஆதரிப்பார் யாரும் இல்லாமையால் காசிமாநகரம் சென்றேன் ; பெரியவர் ஒருவரை அடைந்தேன் ; கற்கவேண்டிய வைகளையெல்லாம் அவரிடம் கசடறக் கற்றறிந்தேன். இப்பொழுது இராமேசுவரத்திற்குச் சென்றுகொண் டிருக்கிறேன். வழியில் தங்களைக் கண்டு செல்ல என் மனம் விழைந்தது. அதனால், இங்கு வந்தேன் !" என்றார்.

" மிக்க மகிழ்ச்சி ! தாங்கள் என்னைப் பார்க்க விரும்பியதன் காரணம் யாதோ ?" என்று கேட்டார் அரியநாதர்.

அந்தணர், " நான் காசியிலிருந்து மெய்ப்பேடு திரும்பியதும், ஒரு நாள் எனது வீட்டிலுள்ள பழைய ஏட்டுச் சுவடிகளைப் புரட்டிப்பார்த்தேன். அப்பொழுது இந்த ஏடு ஒன்று கிடைத்தது. இதன் அடியில், 'அரிய நாதன், என்று கையெழுத்திடப்பட் டிருக்கின்றது. இது தாங்கள் எழுதியதுதானா ? பாருங்கள் !" என்று சொல்லித் தம் கையில் வைத்திருந்த ஏட்டை அவரிடம் கொடுத்தார்.

அரியநாதர் அதனை வாங்கிப் பார்த்தார் ; அதில் எழுதியிருந்த செய்தியையும், அது தம்மால் எழுதப் பட்டிருப்பதையும் உணர்ந்தார் ; மெய்ம்மறந்தார் ; உடனே, "ஆம் ! இஃது அன்றொரு நாள் என்னல் எழுதிக் கொடுக்கப்பட்ட ஏடேயாகும் !" என்று உரக்கச் சொன்னர்.



உடனே அவரையே கவனித்து வந்த அரசன் விசுவநாதன் புன்முறுவல் புரிந்தவாறே, " அமைச்சரே ! என்ன செய்தி ? எங்களுக்குச் சொல்லக் கூடாதா ? 'அன்றொரு நாள் எழுதிக் கொடுத்த ஏடு' என்று தங்களையும் மறந்து கூறினீர்களே !" என்று கேட்டான்.

அரியநாதர், தமது இளமைப் பருவத்தில் தமக்கு, 'விசயநகர அரசில் வேலை கிடைக்கும்' என்று சோதிடர் ஒருவர் சொன்னதையும், 'அவ்வாறு கிடைத்தால், தாம் நன்னிலையில் இருக்கும்போது, தம்மிடம் உள்ள சொத்தில் காற்பகுதியை அவருக்கு அளிப்ப'தாக எழுதிக் கொடுத்ததையும் அவையினர் அனைவரும் அறிய விளக்கமாகக் கூறினர் ; தம் எதிரே நின்றிருந்த அந்தணரைச் சுட்டிக்காட்டி, "இவர் எனக்கு இரேகை பார்த்துக் கூறிய அச் சோதிடரின் மகனாக இருக்கவேண்டும் என்று நினைக்கின்றேன் !" என்றார்.

"ஆம் ; நான் அவர் மகன்தான் !" என்றார் அந்த அந்தணர்.

பிறகு, அரியநாதர் அவரைப் பார்த்து, "ஐயா ! இது நான் எழுதிக்கொடுத்த ஓலையே யாகும். இதில் எள்ளளவும் ஐயம் இல்லை ! இவ்வேட்டில் நான் எழுதிக் கொடுத்துள்ளவாறு எனது சொத்தில் காற்பகுதியை இப்பொழுதே தங்களுக்குத் தருகின்றேன். பெற்றுக் கொள்ளுங்கள் !" என்றார்.

உடனே அவையோர் அனைவரும், "சொன்ன சொல் தவறாத தோன்றல் அரியநாதர் வாழ்க !" எனக் கூறி, அவரைப் பாராட்டினர்.

அரியநாதர் கூறியதைக் கேட்ட அந்தணர், அகம் மிக மகிழ்ந்தார் ; "அமைச்சர் ஏறே ! தாங்கள் சொன்ன சொல் தவறாப் பெருந்தகை யாவீர்கள் ! தாங்கள் இன்னும் பல்லாண்டு பேரும் புகழும் பெற்று வாழ வேண்டும் ! நான் வேதம் ஓதும் பிராமணன். ஆகவே, எனக்கெதற்கு இவ்வளவு சொத்துக்கள் ?" என்று மறுத்துரைத்தார்.

உடனே அரியநாதர் அவரைப்பார்த்து, "அந்தணரே ! அவ்வாறெல்லாம் சொல்லக்கூடாது. நான் சொன்னபடி கொடுத்தால்தான் என் மனம் மகிழ்வுறும் ; நிறைவடையும். ஆதலால், 'வேண்டாம்' என்று கூருது பெற்றுக்கொள்ள வேண்டுகின்றேன் !" என்று வற்புறுத்திக் கூறினர்.

"அமைச்சர் அவர்களே ! எனக்குத் தங்கள் சொத்தில் காற்பகுதி வேண்டவே வேண்டாம் ! தாங்கள் மிகவும் வற்புறுத்திக் கூறுவதால், நான் என் தேவையை — விருப்பத்தை – த் தெரிவிக்கிறேன். அவற்றை மட்டும் கொடுத்தால் போதும் !" என்ருர் அந்தணர்.

"சரி. தங்கள் தேவையைத் தெரிவியுங்கள் !" என்ருர் அரியநாதர்.

அதன்மேல் அந்தணர் தமது விருப்பத்தைத் தெரிவிக்கலானர் : "எனக்குக் காஞ்சிமாநகரில் வாழ ஒரு வீடும், குடும்பம் நடத்துவதற்கேற்ற அளவு நிலமும், ஒரு சிறு தோட்டமும், பசுமாடு ஒன்றும் வேண்டும்."

அரியநாதர் அவர் விருப்பம் அறிந்து வியப்பும் களிப்பும் அடைந்தார் ; அவர் கேட்டவற்றைக் காட்டிலும் மிகுதியாக அவர்க்குக் கொடுத்து மகிழ்ந்தார்.

அவையோர் அந்தணரின் மனநிறைவையும், அரியநாதரின் பெருந்தன்மையையும் கண்டு மகிழ்ந்து பாராட்டினர்.

அரியநாதரால் அன்புடன் அளிக்கப்பட்ட வற்றைப் பெற்ற அந்தணர் மனம் மகிழ்ந்தார் ;

“அமைச்சர் அவர்களே! அள்ளிக் கொடுக்கும் வள்ளற் பெருந்தகையே! சொன்ன சொல் தவருத உத்தமரே! நீங்கள் நெடுங்காலம் வாழ்ந்து, நாட்டு மக்கட்கு நற்றெண்டாற்றி, பொன்ருப் புகழ் பெற்று உயர்வீர்களாக!” என்று வாழ்த்தி விடைபெற்றுச் சென்ருர்.

விசயநகர அரசியல் வேலையில் நுழைந்து, உழைப்பு, ஊக்கம், நல்லொழுக்கம், நுண்ணறிவு, சொன்னசொல் தவருமை முதலிய நற்பண்புகளால் படிப்படியாய் உயர்ந்து மேல்நிலையில் விளங்கிய அரியநாதர், அந்தோ! ஒரு நாள் நாட்டு மக்கள் அனைவரையும் கலங்கச் செய்துவிட்டு, இயற்கை யெய்தினுர்! அவரது பொன்ருப் புகழ் வரலாற்று நூல்களிலும், மக்கள் உள்ளங்களிலும் அழியாத இடம் பெற்றுத் திகழ்கிறது! அவரால் மதுரை மீனுட்சி அம்மன் கோவிலில் அமைக்கப் பெற்ற ஆயிரக்கால் மண்டபம் அவர் பெருமையை இன்றும் உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது! அம் மண்டபத்தின் நுழைவாயிலில் அப்பெருமகன் சிலை வடிவில் நின்று இன்றும் காட்சியளித்துத் தமது பெருமையையும், வீரத்தையும் நாட்டுக்கு உணர்த்தி வருகின்ருர்! அச்சிலையைப் பார்ப்பவர் அவரை நேரில் பார்த்த பேருகவே கருதி மகிழ்ந்து வருகிருர்கள்!

# 6. வில்வீரனும் கொடுங்கோலனும்

'ஐரோப்பாக் கண்டத்தின் விளையாட்டிடம்' என்று போற்றிப் புகழப் பெறும் சிறப்புடையது **சுவிட்சர்லாந்து** என்னும் பெயருடைய ஒரு சிறு நாடாகும். அது மலைவளம் மிக்கது; நாலாறு பாயும் நீர் வளம் உடையது; பெர்னைத் தலைநகராகவும், **ஜெனிவாவை** மேற்கு வாயில் நகரமாகவும் கொண்டது. அங்கே பனி உறைந்த முடிகளும், அழகு மிக்க ஏரிகளும், செங்குத்தான சரிவுகளும் நிரம்ப உண்டு. கோடைக் காலத்தில் மலையேறவும், குளிர் காலத்தில் வெண் பனியில் விளையாடவும், அழகு மிக்க இயற்கைக் காட்சிகளைக் காணவும் அங்கே உலகெங்கணுமிருந்து மக்கள் வந்து கூடுவர். மணிப்பொறி செய்தலும், மின் கருவிகள் செய்தலும் அங்கு நடைபெறும் குடிசைத் தொழில்களாகும். அங்குள்ள மக்கள் உணவு விடுதிகளையும், தங்குமிடங்களையும் வைத்து வாழ்க்கை நடத்தும் வழக்கம் உடையவர்கள் ஆவார்கள். உலகத்திலேயே **செருமன், பிரெஞ்சு, இத்தாலி** ஆகிய மும்மொழிகளும் ஆட்சி மொழிகளாக உள்ள சிறந்த நாடு சுவிட்சர்லாந்து நாடே யாகும்.

இத்தகு சிறப்பு மிக்க இக்காலத்திய சுவிட்சர்லாந்து நாட்டினை, முன்னொரு காலத்தில் **ஆஸ்திரியா** என்னும் மலைநாட்டை ஆண்டு வந்த அரசன் ஒருவன் கைப்பற்றி அடிமை நாடாக ஆக்கினான்; **ஜஸ்லர்** என்னும் பெயருடைய ஒருவனைத் தன் கீழ் அடங்கிய சிற்றரசனாக நியமித்து, அதனை ஆண்டு வருமாறு ஆணையிட்டான்.

ஆஸ்திரிய அரசனின் ஆணைப்படி ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிக்கொண்ட ஜஸ்லர் இரக்கம் என்பது எள்ளளவும் இல்லாதவன்; குடிகளை வருத்துதலையே தொழிலாக உடையவன்; மிகவும் கொடியவன்; அதிகார வெறி பிடித்தவன்.

இத்தகைய பண்புகள் அமைந்த ஜஸ்லர் சுவிட்சர்லாந்து நாட்டினை ஆண்டு வருகையில், அவனுக்கு அந்நாட்டு மக்களை இழிவுபடுத்த வேண்டும் என்ற கீழான எண்ணம் ஒன்று உண்டாயிற்று. அதன் பொருட்டு இதுகாறும் எங்குமே கேட்டிராத புத்தம் புதிய முறையொன்றினை அவன் ஏற்படுத்தலானான்.

ஒரு நாள் ஜஸ்லர் தன் தலைநகருக்கு வெளியே புறப்பட்டுச் சென்றார்; அங்கு ஓரிடத்தில் தூண் ஒன்றினை நிறுத்தினான்; அதில் தன் தொப்பியை மாட்டினான்; அவ்வழியிலே செல்வோரனைவரும் அதற்கு முழுங்காற்படியிட்டு வணக்கம் செலுத்த வேண்டும் என்று கட்டளையிட்டான்; அதனை எல்லோரும் அறிய விளம்பரப்படுத்தினான்; அவ்வாறு யாரேனும் செய்யத் தவறினால் அவர்களுக்குக் கடுந்தண்டனை விதித்தான்; தொல்லை பல கொடுத்துத் துன்புறுத்தினான்; மீறியவர்களின் உயிரைப்போக்கி வந்தான்.

அந்நாட்டு மக்களில் பலர் அடிமை வாழ்வின் இழிவினை அறியாதிருந்தனர்; ஆயினும் அவர்கள் ஜஸ்லரின் இழிசெயலுக்கு உடன்பட மறுத்து வந்தனர்; அதோடு மலைப்பகுதிகளில் சென்று மறைந்து வாழ்ந்து வந்தனர் வேறு பலர் நகரிலே வாழ்ந்தனர். ஆயினும், அவர்கள் எல்லோரும் தூணில்

தொப்பியை வைத்து அதனை வணங்க வேண்டும் என்று ஜஸ்லர் கட்டளையிட்டிருந்த பக்கம் மட்டும் செல்லாதிருந்தனர். அந்த பக்கம் போனால்தான் தமது பிழைப்பு நடக்கும் என்ற கொள்கையுடைய மிகச் சிலர் மட்டும் வேண்டாவெறுப்புடன் அப்பக்கம் சென்றனர்; ஜஸ்லரின் தொப்பிக்கு முழங்காற்படியிட்டு வணக்கம் செலுத்தி வந்தனர்.

சுவிட்சர்லாந்து நாடு அடிமை நாடாயிருந்த அக்காலத்தில் **வில்லியம் தெல்** என்னும் பெயருடைய ஒருவன் அந்நாட்டு மலைப்பகுதிகளில் வாழ்ந்து வந்தான். அவன் சிறந்த வில்வீரன்; மலைவாழ்நன்; உடல் வலிமை உடையவன்; உள்ளத்திண்மை வாய்ந்தவன்; நாட்டுப் பற்று மிக்கவன்; எளிய குடும்பத்திற் பிறந்தவன்; கல்வி அறிவு இல்லாதவன்; வேட்டையாடுவதிலும், குறி தவறாது அம்பெய்வதிலும் வல்லவன்; நல்லியல்புகளும் நற்பண்புகளும் ஒருங்கே கொண்டவன்; அழகான தோற்றம் உடையவன்.

இத்தகைய வில்வீரன் தெல்லுக்கு மகன் ஒருவன் இருந்தான். அவன் மிகச் சிறியவனே ஆயினும், நுண்ணறிவு மிக்கவன். தெல் அவனை அழைத்துக் கொண்டு காலை நேரத்தில் ஆடு மேய்க்கச் செல்வான்; மாலை நேரத்தில் வீடு திரும்புவான். இது அவனுடைய அன்றாடத் தொழில் ஆகும்.

ஒரு நாள் தெல் தன் மகனுடன் தன் வாழிடத்தை விட்டுத் தன் நாட்டின் தலைநகர்க்கு வந்தான். வந்தவன், ஜஸ்லர் தூணை நிறுத்தித் தொப்பியை வைத்திருந்த இடத்தை அடைந்தான்.

மலைவாழ்நனுகிய அவனுக்கு அதனை வணங்க வேண்டும் என்ற கட்டளை இருப்பது அறவே தெரியாது. அதனால், அவன் அதற்கு வணக்கம் செலுத்தாது நடந்து சென்றான்.

அப்பொழுது அங்கு நின்று காவல் புரிந்து வந்த வீரர்கள் அவனை இறுகக் கட்டிப் பிடித்தனர்.

" ஏன் என்னைப் பிடிக்கிறீர்கள் ?" என்று தெல் கேட்டான்.

" உனக்கு இவ்விடத்து முறை எதுவும் தெரியாதோ ?" என்று கேட்டனர் வீரர்கள்.

" தெரியாது !" என்றான் தெல்.

" இந்தத் தூண் நமது நாட்டு ஆட்சித் தலைவர் ஜஸ்லரால் நிறுத்தப்பட்டதாகும். இதன்மேல் தொங்கும் தொப்பியும் அவருடையதே யாகும். இவ்விடத்தைக் கடக்கும் எவரும் இதனை வணங்கி மரியாதை செலுத்த வேண்டும் என்பது அவரின் கட்டளை !" என்று சுருங்க உரைத்தனர் வீரர்கள்.

" ஓகோ ! அப்படியா ! எனக்கு உண்மையிலேயே தெரியாதே !" என்று கூறினான் தெல்.

வீரர்கள், " இதற்கு வணக்கம் செலுத்திவிடு. உன்னை விட்டு விடுகிறோம் !" என்றனர்.

" இல்லா விட்டால் என்ன செய்வீர்கள் ?" என்று எதிர்த்துக் கேட்டான் தெல்.

" எங்கள் தலைவர்முன் கொண்டு நிறுத்துவோம் ; தண்டனை வாங்கித் தருவோம் ?" என்றனர் வீரர்கள்.

" அவன் என்ன தண்டனை தருவான் ?" என்று கேட்டான் தெல்.

"மரண தண்டனை வரைக்கும் தருவார்!" என்றனர் வீரர்கள்.

"இவ்வளவுதானே! வாருங்கள்! உங்கள் தலைவனிடம் செல்வோம்!" என்று கூறி, அவர்களையும் அழைத்தான் தெல்.

வீரர்கள் தெல்லை இழுத்துக்கொண்டு சென்று தமது தலைவர் ஜஸ்லர்முன் நிறுத்தினர்; செய்தியைக் கூறினர். தெல்லின் மகன் எல்லாவற்றையும் வியப்போடு பார்த்துக்கொண் டிருந்தான்.

செய்தி கேட்ட ஜஸ்லர் சினமுற்ருன். அவன் கண்கள் தீப்பிழம்பாயின. முகம் கடுகடுத்து விட்டது. அதிகார வெறி தலைக்கேறிய அக் கொடுங்கோலன், "அடே! என் தொப்பிக்கு நீ ஏன் மரியாதை செய்யவில்லை?" என்று மிடுக்குடன் கேட்டான்.

வாழ்நாளில் எதற்கும் அஞ்சியறியாத தெல், தலைநிமிர்ந்து, "உயிரற்ற தொப்பிக்கு மரியாதை செய்வது என் வழக்கமில்லை!" என்று விடையிறுத்தான்.

தெல்லின் மறுமொழி கேட்ட ஜஸ்லர் ஆத்திரமுற்ருன்; "அடே! நீ என் தொப்பியை மட்டுந்தான் இதுவரை இகழ்ந்தாய் என்று நினைத்தேன். இப்போதோ என்னையும் இகழ்ந்து பேசுகிருய்! இத்தகைய தவறுகளுக்கு என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா?" என்று அதிகாரக் குரலில் கேட்டான்.

"எந்தத் தண்டனையானுல்தான் என்ன? கொடுங்கோலன் விதிப்பதை ஏற்கத்தானே வேண்டும்?" என்ருன் தெல்.

"மரண தண்டனையே விதிக்க வேண்டும். ஆனால், நீ மாவீரனாகக் காணப்படுகிறாய். ஆதலால், நான் ஒரு பந்தயம் வைக்கப் போகிறேன். அப் பந்தயத்தில் நீ வெற்றி பெற்றால், உனக்கு விடுதலை அளிப்பேன். அப்பொழுது நீ வீறுடன் வெளியில் உலவுவாய்! இன்றேல், கல்லறையின் கீழே மண்ணுடன் மண்ணாய் இருப்பாய்!" என்று கத்தினான் கொடுங்கோலன்.

"என்ன பந்தயம்? கூறுங்கள்!" என்று ஆவலோடு கேட்டான் தெல்.

அப்பொழுது சிறிது தொலைவிலே நின்றிருந்த தெல்லின் மகன், 'அப்பா! அப்பா!' என்று கத்திக் கொண்டு, தந்தையருகே ஓடிவந்தான்; அவரை இறுகக் கட்டிக்கொண்டான்.

இதைக் கண்டான் கொடுங்கோலனாகிய ஜஸ்லர். உடனே தெல்லைப் பார்த்து, "அடே! நீ அம்பெய்வதில் சிறந்தவனாமே! அப்படியானால், உன் மகன் தலைமீது நான் ஓர் ஆப்பிள் பழத்தை வைப்பேன். நீ அப்பழத்தைக் குறி தவறாது அம்பெய்து அடித்து விடவேண்டும். அவ்வாறு செய்துவிட்டால், உனக்கு விடுதலை அளிப்பேன். இல்லாவிட்டால், இறப்பாய்!" என்று கூறினான். கூறியவன், தெல்லின் மறுமொழிக்காகச் சிறிதும் காத்திருந்தான் இல்லை. நேராக அவன் மகனை அழைத்துச் சென்று தொலைவிலே நிறுத்தினான்; அவன் தலைமீது ஆப்பிள் பழம் ஒன்றினை வைத்தான். தெல்லைப் பார்த்து, வில்லையும் அம்பையும் எடுத்துக் கொள்ளுமாறும், அம்பினை எய்யுமாறும் கட்டளை யிட்டான்.

கட்டளையை ஏற்ற தெல்லின் மனம் ஒரு நிலையில் இல்லை. தனது நாடு அடிமைப்பட்டிருக்கும் இழிநிலையினை எண்ணி ஒரு கணம் ஏங்கியது ; மறு கணம், தன் அருமை மகன் மீது அம்பு பாய்ந்து விட்டால், அவன் நிலை என்ன ஆகும் என்று எண்ணி வருந்திற்று. அவன் மிகவும் மனக்கலக்க முற்ருன். அவனுடைய கண்கள் அவனையும் அறியாமல் நீரை உகுத்தன. தெல் சிறிது நேரம் தயங்கினுன்.




தந்தை தயங்குவதை அறிந்த மகன், தனக்கு இயற்கையாகவே உண்டான அச்சத்தை மறைத்துக் கொண்டு, தந்தையைத் தேற்றி ஊக்கப்படுத்த முனைந்தான் ; " தந்தையே ! ஏன் தயங்கிறீர்கள் ; தாங்கள் இதுகாறும் எய்த எந்த அம்பும் ஒரு நாளும்

குறி தவறியதே இல்லை! அப்படி இருக்க, இப்பொழுது மட்டும் ஏன் தயங்குகிறீர்கள் ? இப்போது எய்யும் அம்பும் உறுதியாகக் குறி தவருது! ஆகவே, அச்சம் அகற்றி அம்பை எய்யுங்கள் அப்பா !" என்று வேண்டினுன்.

மகனின் ஊக்கவுரை கேட்ட தெல் ஒருவாறு மனம் தேறினுன். வில்லை வளைத்தான்; அம்பைத் தொடுத்தான்; மகன் தலைமீது இருந்த ஆப்பிளைக் குறிவைத்து எய்தான். அம்பு குறி தவருது விரைந்து சென்றது. உடனே அவன் மற்ருேர் அம்பினைக் கையில் எடுத்தான். அதற்குள் விரைந்து சென்ற அம்பு, ஆப்பிளைப் பிளந்துகொண்டு அப்பாற் சென்றது.

பேரச்சத்தோடு நின்றிருந்த இளஞ்சிறுவன் பேரிடர் நீங்கியதை உணர்ந்தான்; 'அப்பா!' எனக் கூவிக்கொண்டு தந்தையை நோக்கி ஓடி வந்தான்.

கொடுங்கோலனுகிய ஜஸ்லரும், மற்றவரும் வில்வீரன் தெல்லின் வீரச் செயல் கண்டு வியந்து நின்றனர்.

தன் எண்ணத்தில் மண் விழுந்ததை உணர்ந்த ஜஸ்லர் மட்டும் ஆணவத்தோடு, "அடே! ஓரம்பினை எய்த பிறகு, நீ ஏன் பிறிதோர் அம்பினை எடுத்தாய்?" என்று உரத்த குரலில் கேட்டான்.

"முதலம்பு தவறுதலாக என் மகன்மீது பாய்ந்து அவன் உயிரைக் கவர்ந்துவிட நேருமானுல், அப்பொழுது நான் எடுத்த இரண்டாவது அம்பினைக் கொண்டு உன்னைக் கொன்றிருப்பேன்!" என்று சொன்னுன் தெல். இதனைக் கூறியபோது அவன்

மனத்தில் அச்சம் என்பது அறவே இல்லை! அமைதியே குடிகொண்டிருந்தது! ஆனால், எள்ளல் நகை மட்டும் அவன் இதழோரத்தில் இழைந்தோடியது!

தெல்லின் கூற்றைக் கேட்ட ஜஸ்லர் சினங் கொண்டான்; சுற்றி நின்றிருந்த வீரர்களை விளித் தழைத்தான்; "இவனைச் சிறையில் அடையுங்கள்!" என்று கட்டளையிட்டான்.

ஜஸ்லரின் ஆணையைப் பெற்ற வீரர்கள் விரைந்து சென்று தெல்லைக் கட்டிப் பிடித்தனர்; அவன் கைகளைப் பிணைத்து விலங்கைப் பூட்டினர்; ஒரு பெரிய ஏரிக்கு அப்பாலுள்ள குன்றென்றின் மீதிருந்த சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லும் பொருட்டு அவனை இழுத்து வந்து படகொன்றில் ஏற்றினர்; தாங்களும் ஏறிக்கொண்டனர். கொடுங்கோலன் ஜஸ்லரும் அதில் ஏறி அமர்ந்துகொண்டான்.

படகு ஏரியின் நடுவே சென்றுகொண்டிருந்தது.

அப்பொழுது திடும் எனப் பெரும் புயற் காற்று ஒன்று வீசத் தொடங்கியது. படகைச் செலுத்திச் சென்ற வீரர்களோ படகோட்டத் தெரியாதவர் களாயும், அப்பகுதியினை நன்கு அறியாதவர்களாயும் இருந்தனர். அதனால், அவர்கள் படகை எத்திசை யிற் செலுத்துவது என்று தெரியாமல் திகைத்தனர்.

நாட்டுத் தலைவன் ஜஸ்லர் இதனை அறிந்தான்; "வீரர்களே! அம்முரடனின் கைகளில் உள்ள விலங் கினைக் கழற்றி விடுங்கள்! அவனுக்கு வழி நன்கு தெரியும்! நம்மை உறுதியாகக் கரை சேர்ப்பான்!" என்று சொன்னான்.

உடனே வீரர்கள் தெல்லின் கையில் இருந்த தளையை நீக்கினர். தளை அவிழ்க்கப் பெற்ற

தெல் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன்போல் காணப் பட்டான்; மிகவும் சுறுசுறுப்போடும், சிறிது மகிழ்ச்சி யோடும் விரைந்துசென்று படகைச் செலுத்தலானான்.

சிறிது நேரத்திற்குள் படகு கரையை நோக்கிச் செல்லத் தொடங்கிற்று. அது கரையை நெருங்கியதும் தெல் அதிலிருந்து தாவிக்குதித்துக் கரையை அடைந் தான்; தனது வல்லமை அனைத்தையும் கொண்டு படகை எதிர் நோக்கித் தள்ளினான்.

தெல்லால் தள்ளுண்ட படகு பாறையொன்றில் மோதிக் கவிழ்ந்து சுக்குநூறு ஆகியது! படகில் இருந்தோர் அனைவரும் ஏரியில் மூழ்கி மாண்டொழிந் தனர்.

கொடுங்கோலனை அழித்த தெல் தன் நாட்டிற்குச் சென்றான் ; நாட்டு மக்களை ஒன்று திரட்டினான் ; நிகழ்ச்சியைத் தெரிவித்தான் ; அதன் வழியாக அவர்கள் உள்ளங்களில் எல்லாம் விடுதலை வேட் கையை எழுப்பினான்.

மக்கள் உணர்ச்சி பெற்று ஒருங்கு திரண்டெழுந் தனர். அவர்கள் எழுச்சி, பெரும் புரட்சியாக மாறிற்று. புரட்சி, போராக உருப்பெற்றது. ஆஸ்திரிய மன்னன் தோல்வியுற்று நாட்டைவிட்டு ஓடிமறைந்தான். அடிமை நாடாகவிருந்த சுவிட்சர்லாந்து விடுதலை நாடாக ஆயிற்று.

நாடு விடுதலை பெற உழைத்த நல்லோனாகிய வில்வீரன் வில்லியம் தெல்லின் செயலை, இன்றும் அந்நாடு போற்றிப் புகழ்ந்து வருகின்றது !

# 7. தந்தையும் மைந்தனும்

**துங்கபத்திரை** என்பது ஓர் ஆறு. அவ் யாற்றின் தென்கரையில் ஒரு நகரம் இருந்தது. அது **வித்தியா ரண்ணியர்** என்பவருடைய உதவியால் அமைக்கப் பெற்றது. அதனால் அதற்கு **வித்தியாநகரம்** என்ற பெயர் உண்டாயிற்று. நாளடைவில் அப் பெயரே **விசயநகரம்** என வழங்கலாயிற்று.

விசயநகரம் ஏறத்தாழ அறுபது கல் சுற்றளவினை உடையது ; மலைகளாலும் காடுகளாலும் ஆகிய இயற்கை அரண்களையும், ஏழு கோட்டைகளையும் கொண்டது ; வானளாவிய மாட மாளிகைகளையும், பேரியாறு போன்ற பெருங் கடைத் தெருக்களையும் பெற்றது ; மணம் மிக்க மலர்ச் சோலைகளையும், கண்கவர் சிற்ப-ஓவியச் சாலைகளையும் உடையது ; மக்களை இன்பத்திலாழ்த்தும் இசை-நடன-நாடக அரங்குகளையும், உள்ளத்தை ஒருவழிப்படுத்தும் உயரிய கோவில்களையும் கொண்டது, கண் எனத் தக்க கல்வியைக் கற்பிக்கும் பல்கலைப் பள்ளிகளையும், மாந்தர்க்குப் பயிற்சியளித்து மாவீரராக்கும் மற்போர்க் கூடங்களையும் உடையது; எழில் மிகு அரண்மனையையும், எண்ணிலா வீரர்களையும் பெற்றது.

இத்தகைய நகரைத் தலைநகராகக் கொண்டு விசயநகரப் பேரரசினை ஒரு காலத்தில் **கிருட்டின தேவராயர்** என்பவர் ஆண்டு வந்தார். அவர் **நரச நாயக்கருக்கும் நாகலாதேவிக்கும்** மகனாகப்

பிறந்தவர் ; அஞ்சா நெஞ்சமும், அரசியல் அறிவும் பெற்றவர் ; ஊக்க உள்ளமும், எளியவர்க்கு ஈயும் இரக்க எண்ணமும் உடையவர் ; புலவர் எண்மரைப் புரந்த புலவர் ; பெரியாழ்வார், மகளான ஆண்டாள் வரலாற்றை ' **ஆமுக்த மால்யதா** ' என்னும் பெயரால் சுந்தரத் தெலுங்கினில் பாடியவர் ; குடிமக்களிடம் மிக்க அன்புடையவர் ; **திருமலாதேவி, சின்னுதேவி** என்பவர்களை வாழ்க்கைத் துணைவியராகப் பெற்றவர் ; பேரழகும் பெருமிதத் தோற்றமும் பேச்சுத் திறனும் அமைந்தவர் ; ' **ஆந்திர போசன்** ' என்ற பட்டம் பெற்றவர் ; இசை-நடன-நாடகக் கலைகளை வளர்த்த காவலர் ; தெலுங்கு, வடமொழி முதலிய மொழிகளை அறிந்த பாவலர்.

இத்தகைய இராயரது ஆட்சியைச் சிறப்புற நடத்திச் சென்றவர் இருவராவர். ஒருவர், அமைச்சர். **திம்மரசு** என்ற **அப்பாஜி** என்பது அவர் பெயர். மற்றவர், படைத் தலைவர். **நாகமர்** என்பது அவர் பெயர்.

படைத் தலைவராகிய நாகமர் **காஞ்சிபுரத்தில்** பிறந்தவர்; கிருட்டினதேவராயரின் முன்னோர்காலத்திலிருந்தே விசயநகர அரசில் அலுவல் ஆற்றி வந்தவர் ; போர் பல புரிந்து வெற்றி பல பெற்றவர் ; தென்னுடு முழுவதும் சுற்றி அறிந்தவர். இராயரது ஆட்சிக் காலத்தில் இவர் தென்னுட்டின் மகா மண்டலேசுவரராகவும் விளங்கினுர். இவருக்கு **விசுவநாதன்** என்னும் பெயருடைய மகன் ஒருவன் இருந்தான். அவன் கிருட்டினதேவராயரின் அடைப்பைக்காரனுக வேலை பார்த்து வந்தான்.

நாகமர் தென்னாட்டின் மகா மண்டலேசுவரராக இருந்து பணிபுரிந்து வருகையில், தெற்கே சிறிது குழப்பம் ஏற்பட்டது.

வீரசேகரன் என்பவன் சோழ நாட்டையும், சந்திர சேகரன் என்பவன் பாண்டிய நாட்டையும் விசய நகரப் பேரரசின் ஆட்சிக்கு அடங்கிய அரசர்களாக இருந்து ஆண்டு வந்தனர். சோழ அரசன் வீரசேகர னுக்குப் பேராசை உண்டாயிற்று. அதனல் பாண் டிய நாட்டைக் கவர எண்ணினன்; பெரும் படை யுடன் சென்றான்; பாண்டியனைப் போரில் முறியடித் தான்; முடிவில் பாண்டிய நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான்.

சந்திரசேகரன் வீரசேகரனிடம் தோற்றுனுயினும் அவன் கைக்கு அகப்படாது தப்பினன். தப்பியவன், நேரே விசயநகரம் சென்றான்; பேரரசர் கிருட்டின தேவராயரைக் கண்டான்; தனது நிலைமையை இராயருக்கு எடுத்துரைத்தான்.

செய்தி அறிந்த இராயர் மனம் மிக வருந்தினர்; கவலையுற்றார்; தமது அலுவலர் கவனியாது விட்டதற் காக வருந்தினர். மறுநாள் இராயர் அவையைக் கூட்டினர்; பாண்டியனை வரவழைத்தார்; நடந் ததைக் கூறுமாறு அவனைப் பணித்தார். பாண்டியன் சந்திரசேகரன் தனது முறையீட்டை யாவரும் அறியக் கூறினன். கேட்டோர் அனைவரும் திடுக்கிட்டனர். இராயரும் கடுஞ்சினம் கொண்டார். உடனே தென் னட்டு மகாமண்டலேசுவரரான நாகமனை நோக்கி னர்; "நாகமரே! நீர் பெரும் படையோடு புறப்பட்டுச் சென்று, சோழனைத் தோற்கடித்து, பாண்டியனைப்

பழையபடி அரியணையில் ஏற்றி வருக!'' என்று ஆணையிட்டார்.

நாகமர் இராயர் ஆணையை ஏற்றார்; பெரும்படையுடன் மதுரை நோக்கிப் புறப்பட்டார். பாண்டியன் சந்திரசேகரனும் அவருடன் சென்றான்.

நாகமர் பெரும் படையுடன் வருவதைச் சோழன் வீரசேகரன் அறிந்தான்; கடுஞ் சினம் உற்றான்; பெரும் படை திரட்டினான்; போர்க்கோலம் பூண்டு புறப்பட்டான்; வழியிலேயே மறித்து நாகமர் படையைத் தாக்கினான்; ஆயினும், தோல்வியுற்றான்!

வெற்றி பெற்ற நாகமர் பாண்டிய நாடு சென்றார்; சந்திரசேகரனை அரியணையில் ஏற்றி அரசாளச் செய்தார்; இராயருக்கு இச் செய்தியை அறிவிக்க ஆள் அனுப்பினார்; அமைதி நிலவும் வரை தாம் அங்கேயே தமது படையுடன் இருந்து வரலானார்.

இவ்வாறு இருந்து வரும்பொழுது, நாகமர் பாண்டிய நாட்டைச் சுற்றிக் காண விரும்பினார்; அதன் பொருட்டுப் புறப்பட்டுச் சென்று நாடெங்கும் சுற்றிப் பார்த்தார். அந்நாட்டுச் செல்வ வளமும் இயற்கை வளமும் அவர் உள்ளத்தைக் கவர்ந்தன. பேராசைக்கொண்டார்; அறிவைஇழந்தார்; அறத்தை மறந்தார்; நீதியை மறந்தார்; நேர்மையை மறந்தார்; மனமாற்றம் அடைந்தார்; தாமே நாடாள நினைத்தார்; 'சந்திரசேகர பாண்டியனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது' என்று கட்டுக் கதை கட்டி விட்டார்; அவனைப் பிடித்துச் சிறையில் அடைத்தார்; தாம் பாண்டிய அரியணையில் அமர்ந்தார்; தாமே தமக்கு முடி சூடிக்கொண்டு நாட்டை ஆளத் தொடங்கினார்.

இச் செய்தி விசயநகரத்துக்கு ஒற்றர் வழியாக எட்டியது. அமைச்சர் திம்மரசு முதன் முதல் இதனை அறிந்தார் ; அரசர்க்கு அறிவித்தார்.

பல வழிகளிலும் உசாவி உண்மை உணர்ந்த அரசர் மறுநாள் அரசவையைக் கூட்டினுர். அவையோர் அனைவரும் வந்திருந்தனர். இராயர், "அவையோர்களே ! நாம் பாண்டிய நாட்டைச் சோழனிடமிருந்து மீட்டுப் பாண்டியனுக்குத் தருமாறு, நமது படைத் தலைவர் நாகமரை அனுப்பி யிருந்தோம். அவர் சென்று அவ்வாறே செய்வார் என்றும் நம்பினேம். ஆனுல், அவர் பாண்டியனைச் சிறையில் தள்ளித் தாமே அரசராக ஆகிவிட்டார் ; ஆம் ; நமது நம்பிக்கைக்குத் துரோகம் செய்து விட்டார் ; நமது நல்லாட்சிக்கு நீங்காத பெரும்பழியை ஏற்படுத்தி விட்டார். இதுவரை நமது ஆணை தவருது நடந்து வந்த உண்மை ஊழியரான நாகமர் செல்வப் பேராசையால் இப்போது ஆணை கடந்து விட்டார். ஆகவே, நமது ஆணை கடந்த அவரைச் சிறைப் பிடித்து வர எண்ணியுள்ளேன். அது பற்றிய தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன்" என்ருர்.

அவையோர் அனைவரும் ஒருமித்தக் குரலில், "தங்கள் கருத்தே எங்கள் கருத்தும் !" என்று கூறினர்.

உடனே இராயர், "அவரைச் சிறைச்செய்து கொணர முன்வருவோர் எழுந்து வந்து இந்த வாளைப் பெற்றுக் கொள்க !" என்ருர்.

'நாகமர் சிறந்த வீரர் ; எல்லாப் போர்களிலும் வெற்றி வாகை சூடியவர். அவரிடம் நமது நாட்டின்

பெரும் படை இருக்கிறது. படைவீரர்கள் அனைவரும் அவர் சொல்லைத் தட்டமாட்டார்கள். ஆதலால், இஃது இயலாத செயல்' எனக் கருதினர் அவையினர். அதனால், அவர்கள் அனைவரும் அஞ்சி வாளா இருந்தனர்.

இராயர், அவையினரைப் பார்த்து, "ஒருவரும் எழக்காணோமே! மெய் வீரர் என்பவரே இங்கு இல்லையா? நாகமர் ஒருவர் தாமா வீரர்? அவருடன் வீரம் என்பதே மடிந்து விட்டதா?" என்று பெருஞ் சீற்றத்துடன் கேட்டார்.

அப்பொழுது அவையில் இருந்து ஒருவன் எழுந்தான்; "அரசர் ஏறே! நான் செல்கிறேன். என்னிடம் வாளைத் தாருங்கள்!" என்றான். அவன் வேறு யாரும் இல்லை! நாகமரின் மைந்தன் விசுவநாதனே ஆவான்!

இராயர் விசுவநாதன் எழுந்திருப்பதைக் கண்டு மிகவும் வியப்படைந்தார்; சீற்றம் தணிந்தார்; 'யார்? நீயா! விசுவநாதனா! நாகமன் மகனா!' என்று கேட்டார்.

"ஆம், அரசே! நான்தான். நாகமர் என் தந்தை. ஆனால், அவர் நீதியையும் நேர்மையையும் நிலை நிறுத்தத் தவறினர். ஆயினும், அவற்றின்முன் அவர் என் தந்தையாகத் தெரியவில்லை. நான் கடமையைப் பெரிதாக மதிக்கிறேன். அதன் பொருட்டே புறப்பட்டுச் செல்ல முனைந்தேன். என் தந்தையைப் பிடித்து வந்து தங்கள் முன் உறுதியாக நிறுத்துவேன்!" என்று மறுமொழி புகன்றான் விசுவநாதன்.

" விசுவநாதா! உன் கடமை யுணர்ச்சி கண்டு மகிழ்கிறேன். இதோ வாள்! பெற்றுக்கொள்!" என்றார் இராயர்.

அப்பொழுது அமைச்சர் திம்மரசு இருக்கையை விட்டு எழுந்தார்; " அரசே! மன்னிக்கவேண்டும். விசுவநாதனை அனுப்பக் கூடாது!" என்றார்.

" ஏன் ?" என்று கேட்டார் இராயர்.

" விசுவநாதன் இளைஞன்; ஏதுமறியாதவன். மேலும், நாகமர் அவன் தந்தை. மதுரையை அடைந்ததும் நாகமரோடு இவனும்சேர்ந்துவிட்டால், என்ன செய்வது ?" என்று கேட்டார் அமைச்சர் திம்மரசு.

"அரசர் பெருமானே! நான் இளைஞனே! ஏதுமறியாதவனே! நாகமர் என் தந்தையே! ஆயினும், நான் கடமை தவறமாட்டேன். என்னை முழுமனத்துடன் நம்பி அனுப்புங்கள். நான் நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டேன். என்னைப் பற்றிச் சிறிதும் ஐயுறல் வேண்டாம். என் நாட்டின்முன் எனது சுற்றம் எனக்குத் துரும்பு! நாட்டின் கடமையே எனக்குத் தந்தை!" என்று கூறினான் விசுவநாதன்.

" அரசே! குருதிப் பற்றுக் கொடியது! அதன் முன் கடமை நிற்குமா வேந்தே? என்னால் நம்பவே முடியவில்லை!" என்றார் அமைச்சர் அப்பாஜி.

" அமைச்சரே! வீணாக ஐயப்பட வேண்டாம். அவன் நமது உண்மை ஊழியன். அவனையே அனுப்ப எண்ணுகிறேன். அவையினர் கருத்தும் அதுவாகவே இருக்கும் என நினைக்கின்றேன்!" என்றார் அரசர்.

எல்லோரும், "அப்படியே செய்யுங்கள்!" என்றனர்.

அமைச்சர் திம்மரசு மட்டும், "அரசே! விசுவநாதனுடன் நமது தளவாய் அரியநாதரையும் அனுப்பி வைக்க வேண்டுகிறேன்" என்றார்.

உடனே இராயர், "விசுவநாதா! இதோ, பெற்றுக்கொள் வாளை! உன் நண்பர் தளவாய் அரியநாதர் உனக்குத் துணை புரிவார். வெற்றியோடு மீள்க!" என்று கூறி, அவனிடம் வாளை அளித்தார்.

அவையினரும், "வெற்றி யுண்டாகுக!" என்று வாழ்த்தினர்.

விசுவநாதனும் அரியநாதரும் அரசரைப் பணிந்தனர். விசுவநாதன் அரசரிடமிருந்து வாளைப் பெற்றான். பிறகு, இருவரும் அரசரிடம் விடைபெற்றுப் பெரும்படையோடு மதுரைக்குச் சென்றனர்.

நாகமர் தன் மகனே தம்மோடு பொர வருகிறான் என்பதையும், அவனுக்குத் துணையாகத் தம்மிடம் கணக்கனாய் இருந்த அரியநாதன் வருகிறான் என்பதையும் அறிந்தார்; அவர்கள்மீது அளவற்ற சினங் கொண்டார்; படைகளைத் திரட்டி ஆயத்தமாக இருக்குமாறு தமது படைத் தலைவர்களுக்கு ஆணையிட்டார்; தாமும் போருக்குத் தயாரானார்.

இந்த நேரத்தில் விசுவநாதனும் அரியநாதரும் மதுரை சேர்ந்தனர்; புறநகரில் பாடி வீடு அமைத்துத் தங்கினர்.

பிறகு, விசுவநாதன் தளவாய் அரியநாதனை நாகமரிடம் அனுப்பினான்; "நாகமர் பாண்டியனிடம்

அரசை ஒப்புவிக்க வேண்டும். இல்லாவிட்டால், பாண்டியனை அரசனுக்கி நாகமரைப் பிடித்துவர வேண்டும்'' என்ற பேரரசர் இராயர் ஆணையைத் தன் தந்தையிடம் தெரிவிக்குமாறு கூறினன்.

அரியநாதர் விசுவநாதனின் வேண்டுகோளை ஏற்றுச் சென்ருர்; நாகமரைப் பார்த்தார்; செய்தியைத் தெரிவித்தார்.

செய்தி கேட்ட நாகமர் சிறிதும் மனமாற்றம் கொள்ளவோ, பாண்டியனிடம் நாட்டை ஒப்படைக்கவோ எண்ணினர் இல்லை. மாருகத் தாம் துணிந்து முடிவு செய்திருந்த எண்ணத்தையே வலியுறுத்தினர். "என் மகன் திரும்பிச் செல்லாவிடில், அவனை நான் போர்க்களத்திலேயே சந்திப்பேன். அப்பொழுது என் முடிவை அவன் அறிவான்!'' என்று கூறினர்.

அரியநாதருக்கு நாகமரின் போக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆயினும், 'தந்தைக்கும் மைந்தனுக்கும் இடையே போர் மூளவும் பகை வளரவும் இடந்தரலாகாது' என்று கருதினர். அதனல், நாகமரிடம் மிகவும் பொறுமையுடனும் அமைதியுடனும் எவ்வளவோ எடுத்துக் கூறிப் பார்த்தார். அப்பொழுது அவர் நாகமரிடம் எவ்வித மாற்றத்தையும் கண்டார் இல்லை. நாகமர் தாம் கொண்ட கொள்கையில் விடாப்பிடியாய் இருப்பதை உணர்ந்த அரியநாதர், அவர் மனைவியும் விசுவநாதன் தாயுமான **மங்கம்மையார்** என்பவரிடம் கூறிப் போரைத் தடுத்துவிடவும், நாகமரின் மனத்தை மாற்றி விடவும் விரும்பினர். அதன் பொருட்டு மங்கம்மையைத் தனித்துப் பார்த்தார்; அவரிடம், "தந்தைக்கும் மைந்தனுக்கும்

நிகழவிருக்கும் போரைத் தவிருங்கள்; அல்லது பாண்டியனிடம் பொறுப்பை ஒப்படைக்குமாறு தங்கள் கணவர்க்குக் கூறுங்கள்" என்று வேண்டினர்.

மங்கம்மையாரோ, 'தம் கணவர் போக்கு நேர்மை யானதே' என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். அதனால், அவர் தம் கணவர் மனத்தை மாற்ற விரும் பினர் இல்லை. மாறாக, மகனின் மனத்தையே மாற்ற முயன்றார். அதனால், தம் எதிரே இருந்த அரியநாத ரைப் பார்த்து, "அரியநாதரே! தாங்கள் செல்லுங்கள். நான் உடனே புறப்பட்டு வந்து என் மகனை நேரில் பார்க்கிறேன். அவனுக்கு நல்லுரைகளை எடுத்துக் கூறிப் போர் மூளுவதைத் தவிர்க்க முயல்கின்றேன்" என்றார்.

'போர் மூளாதும், பகை வளராதும் செயல் இனிது முடிந்தால் போதும். அதுவே பெரு வெற்றி யாகும்' என்ற கருத்துக் கொண்ட அரியநாதர், 'தாயும் முயன்று பார்க்கட்டும்' என்று கருதிச் சிறிது இடைவெளிவிட்டுச் சென்றார்.

சென்றவர், விசுவநாதனைக் காணப் பாடிவீட்டுள் நுழைந்தார். அப்பொழுது காவலன் ஒருவன் விசுவ நாதனிடம், "தலைவ! தங்களைப் பெற்றவர் தங்களைக் காண வந்துள்ளார்கள். வாயிலில் காத்திருக்கின்றார் கள்!" என்று கூறிக்கொண்டிருந்தான. அதனால், அரியநாதர்க்குத் தாம் சென்று வந்த செய்தியைத் தெரிவிக்க வேண்டிய இன்றியமையாமையே இல்லாது போயிற்று. விசுவநாதனும் தன் தாயே தன்னைப் பார்க்க வந்திருக்கிற செய்தி கேட்டு மனக் குழப்பம் உற்றிருந்தான். ஆதலால், அவனும் அரிய

நாதரிடம் செய்தி கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமே என்பதனை மறந்து விட்டான்.

இந் நிலையில் விசுவநாதன் காவலனைப் பார்த்து, “ நீ சென்று என் தாயை வரச் சொல்!” என்று கூறினான். ‘ தாய்க்கும் சேய்க்கு மிடையே தாம் எதற்கு?’ எனக் கருதிய குறிப்பறிவுடைய அரிய நாதர், அவ்விடத்தை விட்டு அகன்றார்.

விசுவநாதனின் தாய் மங்கைம்மையார் உள்ளே வந்தார். விசுவநாதன் எழுந்து சென்று முகமலர்ச்சியோடு அவரை வரவேற்றான்; அவர் அமர்வதற்கு இருக்கை அளித்தான். பிறகு இருவரும் ஒருவர்க்கொருவர் நலம் உசாவிக்கொண்டனர்.

மங்கம்மையார் மகனைப் பார்த்து, ‘விசுவா! இவ்வளவு தொலைவு வந்த நீ, ஏன் மதுரைக்கும் வரக்கூடாது? பெற்றவர்களான எங்களை யெல்லாம் பார்க்கக் கூடாதா? நாங்கள் உனக்கு என்ன தீங்கு இழைத்தோம்? நாங்கள் இருவரும் வாழ்வதே உன் நலத்திற்குத்தானே? ஏனடா மகனே, இங்கேயே தங்கி விட்டாய்? வா என்னுடன்! தந்தையைப் பார்த்து வரலாம்!” என்று எதுவும் அறியாதவர்போல் கேட்டார்.

உடனே விசுவநாதன், “ தந்தையைத்தான் அம்மா பார்க்க வந்திருக்கிறேன். நானாக அல்லன்; பேரரசர் ஆணையோடு! அவைக்களத்தில் அன்று; போர்க்களத்தில்! இது தங்களுக்குத் தெரியாதா அம்மா?” என்று கேட்டான்.

“ தெரியாதடா விசுவா! போர்க்களத்திலா? யாருடன்?” என்று கேட்டார் தாயார்.

“அப்பாவுடன் அம்மா! தந்தையும் மைந்தனும்!” என்றான் மகன் விசுவநாதன்.

“தந்தையுடன் மைந்தன் போர் புரிவதா? எதற்காக?” என்று கேட்டார் மங்கம்மையார்.

“என் தந்தை அறநெறி தவறிவிட்டார்கள். அதன் பொருட்டு அரசாணை பெற்று வந்துள்ளேன்” என்றான் விசுவநாதன்.

“அறநெறி தவறிய தந்தைக்கு மைந்தனா அற வழி காட்டுவது? உன் தந்தை உன்னைக் காட்டிலும் அறிவிலும், ஆற்றலிலும், அனுபவத்திலும் மிக்கவர். அவர் அறநெறி தவறினார் என்றால், அஃது அவரது தந்நலத்திற்காகவா? எல்லாம் உன் நன்மைக்காகத் தானே? உன் நலமே தம் நலமாகக் கொண்டுள்ள தந்தையோடு நீ எப்படியடா போர் புரியத் துணிந்தாய்?” என்று கேட்டார் மங்கம்மையார்.

“அம்மா! தங்கள் கருத்துப்படி, என் தந்தை எனக்காக நலம் தேடினார் என்றே வைத்துக்கொள்வோம். அதை ஏன் அவர் நேர்மையான வழியில் செய்திருக்கக் கூடாது? அவ்வாறு அவர் செய்திருந்தால் நான் மிகவும் மகிழ்ந்திருப்பேன். இங்கு நான் போர்த் தலைமை பூண்டு வ[illegible]நக்கவும் நேர்ந்திராது. ஆனால், அவரோ நே[illegible] தவறியன்றோ நடந்திருக்கிறார்? நான் எப்படி [illegible]மா அதனை ஏற்க முடியும்?” என்றான் விசுவநாதன்.

“மகனே விசுவா! உனக்கு நேர்மையல்லாததாகத் தெரிவது உன் தந்தைக்கு நேர்மையானதாகத் தெரிகிறது. அப்படியிருக்க, நீ ஏன் அதை ஏற்க மறுக்க வேண்டும்? ஆகவே, மகனே, போரைத்

தவிர்த்துப் புறப்படு என்னுடன் ! உன்னுடன் வந்துள்ள படையும் உன் பின்னே வரட்டும். மதுரை மாநகர மக்கள் வாழ்த்தி வரவேற்க, நீ மன்னனுய் வீற்றிருக்கலாம். நீ மன்னனுய் வீற்றிருப்பது கண்டு நான் மகிழ்வேன். தாய் என்றும் கெட்ட புத்தி கூறித் தன் மகனைக் கெடுக்க நினைக்கவே மாட்டாள். ஆகவே, கண்ணே ! இந்த நல்ல வாய்ப்பை இழக்காதே ! புறப்படு !'' என்ருர் தாயார்.

"அம்மா ! நான் தங்களுடைய இக்கருத்தை ஒரு நாளும் ஏற்க மாட்டேன். தாங்கள் என்னைத் திருத்துவதைவிட என் தந்தையைத்—தங்கள் கணவரைத்—திருத்தி, அவரைப் பாண்டியனிடம் அரசை ஒப்புவிக்கச் செய்யுங்கள். நான் திரும்பிச் சென்று விடுகின்றேன். இல்லாவிட்டால், போர்க்களத்தில் தான் சந்திக்க நேரும். அம்மா ! இதில் எள்ளளவும் மாற்றம் இல்லை !'' என்ற தனது கருத்தை முடிவாகத் தெரிவித்தான் விசுவநாதன்.

"அவரைத் திருத்த எனக்குத் தெரியும் ! அதை நீ சொல்லி நான் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. பேசாமல் வந்து நீ அரசை ஏற்றுக்கொள். உன் தந்தையின் வீரம் உனக்கு நன்கு தெரியும். பிறகு, உன் விருப்பம் ! [illegible]ன்ருர் மங்கம்மையார்.

"அம்மா ! [illegible]ர் கடமை யுணர்ந்தவன் ; அரச கட்டளையோடு வந்துள்ளேன். அதனுல், நான் என் கருத்தில் எவ்வித மாற்றமும் செய்து கொள்வதற்கில்லை. எத்தகைய வீரமாயினும், அதனைக் களத்திலேயே காண்பேன் !'' என்ருன் விசுவநாதன்.

தாம் எடுத்த முயற்சியில் தோல்வியுற்ற மங்கம்மையார் அங்கிருந்து நேராகத் தம் கணவரிடம்

சென்றார்; தாம் தம் மகன் விசுவநாதனிடம் சென்று வந்த செய்தியையும், அவன் விடாப்பிடியாய் இருப்பதையும் அவர்க்குச் சொன்னார். மேலும், "நமக்குத் தான் ஏன் இந்தத் தொல்லை? பேசாமல் பாண்டியனிடம் அரசை ஒப்படைத்து விடுங்களேன்!" என்று நயமாகக் கூறிப் பார்த்தார்.

அதற்கு நாகமர், "மங்கா! நீ தந்தை என்றும் பாராமல் என்னோடு போர் புரிய வந்திருக்கும் நம் மகனைக் காணச் சென்றது மாபெருந் தவறு. நான் அவனுக்காகச் செய்திருக்கும் நல்ல செயல், அவனுக்குப் பழியாகப் பட்டால், அதற்கு நான் என்ன செய்வது? இப்பொழுது அவன் உணரவில்லையானால் போர்க்களத்தில் உணர்த்தி விடுகிறேன். நீ ஒன்றும் என்னைத் தடுக்காதே!" என்று கூறித் தம் மனைவியை மறுபேச்சுப் பேசவிடாது போகச் செய்தார்.

இரு பக்கத்தும் தோல்வியுற்ற மங்கம்மையார், கண்ணீர் விட்டுக்கொண்டே சென்றார்.

இந்நிலையில் இருதிறத்துப் படைகளும் போர் புரியத் தொடங்கின.

அரசர் இராயர்பால் அளவற்ற பற்றுடைய விசுவநாதன், தான் தன் தந்தையாருடன் போர் புரிகிறோம் என்பதையே மறந்தான்; பகை வேந்தர் ஒருவரோடு போர் புரிவதாகவே எண்ணிக்கொண்டு கடும் போர் புரிந்தான். அரியநாதரும் படைகளுக்கு உணர்ச்சி யூட்டி, நாற்புறமும் வளைத்துப் போரிட வகை செய்தார். இந்நிலையில் நாகமர் படை சின்னபின்னம் அடைந்து ஓடி ஒளிந்தது. தந்தை நாகமரை மைந்தன் விசுவநாதன் சிறைப்படுத்தினான்!

அப்பொழுது அவன் தன் அருமைத் தந்தையைப் பார்த்து, "அப்பா! என்னை மன்னித்தருளுங்கள். நான் அரசர் ஆணை பெற்று இங்கு வந்தவன். அதன்படி அவர் ஆணையை நிறைவேற்றி யுள்ளேன். ஆகவே, தாங்கள் என்னுற் கைவிலங்கு பூட்டப் பட்டவர் அல்லர். நீதியாற் கைவிலங்கு பூட்டப்



பட்டவர்கள்!" என்று கூறிக் கண்ணீர் வடித்தான். நாகமரும் தமது தவறுணர்ந்து கண்ணீர் உகுத்தார். இருவரது நிலையையும் கண்ட அரியநாதரும் மிகவும் வருத்த முற்ருர்.

பிறகு விசுவநாதன் அரியநாதரைப் பார்த்து, "அரியநாதரே! தாங்கள் உடனே மதுரை செல்லுங்கள். நமது பேரரசர் இதுபற்றி ஒரு முடிவுக்கு வரும்

வரை, தாங்கள் பாண்டியனுக்கு உதவியாக இருந்து வாருங்கள். நான் என் தந்தையை அழைத்துக் கொண்டு விசயநகரம் செல்கின்றேன் !'' என்றான்.

அரியநாதர் விசுவநாதனை நன்கு அறிந்தவர். ஆதலால், அவன் தனியாகத் தன் தந்தையை அழைத்துச் செல்வது குறித்துச் சிறிதும் ஐயமுற்றார் இல்லை. அதனால் அவன் கருத்துக்கு அவர் முழு மனத்துடன் இசைவளித்து அதனை ஏற்றுக்கொண்டு மதுரை சென்றார்.

விசுவநாதன் தன் தந்தையை அழைத்துக் கொண்டு விசயநகரம் சென்றான்.

சில நாட்களில் விசுவநாதனும் நாகமரும் விசய நகரம் சேர்ந்தனர் ; அரசவையுள் சென்று அரசர் பெருமானை வணங்கினர்.

இருவரையும் கண்ட இராயர் அளவற்ற இன்பம் அடைந்தார்.

அவையிலிருந்தோர், "விசுவநாதன் உண்மை யான அரச ஊழியன். இளம் பருவத்தில் பெரு வீரத் தோடு போர் புரிந்து, தந்தை என்றும் பாராமல் பிடித்து வந்து விட்டானே !'' என்று கூறி அவனைப் பாராட்டினர்.

நாகமர் மட்டும் நாணத்தால் தலைகுனிந்து நின்றார்.

இராயர் விசுவநாதனை அன்புடன் நோக்கி, "உனது கடமை உணர்ச்சியை—உண்மையான அரச ஊழியத்தைப் பாராட்டுகிறோம். அதன் பொருட்டு

உனக்குப் பரிசளிக்க விரும்புகிறோம். உனக்கு விருப்பமான பரிசை மறைக்காமலும் நாணமுறாமலும் கேள் !'' என்று கூறினர்.

விசுவநாதன் இராயரை வணங்கி, "அரசர் பெருமானே ! என் தந்தையை மன்னித்து விடுங்கள். இதுவே நான் விரும்பும் பரிசு !'' என்றான்.

இராயர், "விசுவநாதா ! நான் இத்தகைய பரிசை நீ விரும்புவாய் என்று ஒரு சிறிதும் கருதவில்லை. ஆயினும், உனது விருப்பப்படியே உன் தந்தைக்கு மன்னிப்பளிக்கின்றேன்'' என்றார். அவையினர் யாவரும் ஆரவாரம் செய்து அரசர் கருத்தை வரவேற்றனர்.

உடனே நகாமர் கைகளில் பூட்டப்பெற்றிருந்த விலங்கு கழற்றப் பெற்றது. அவ்வொலியும் ஆரவார ஒலியுடன் கலந்து ஒலித்தது. தளை அவிழ்க்கப் பெற்ற நாகமர் பெருமகிழ்வுற்றார். அவர் தலை தாழ்ந்திருந்தது. கைகள் கூப்பிய வண்ணம் அரசர் பெருமானை வணங்கி நின்றன. அவர் கண்களில் இருந்து அவரையும் அறியாமல் ஆனந்தக் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

இவற்றை யெல்லாம் கண்ட விசுவநாதன் தான் கிடைத்தற்கரிய பெரும் பேறு பெற்றவனாகி நினைத்து மகிழ்ந்தான்.

# 8. பாண்டியனும் நக்கீரரும்

தமிழகத்தில் பழமையான நகரங்கள் பல உண்டு. அவற்றுள் **மதுரைமாநகரமும்** ஒன்ருகும். அது செல்வச் சிறப்புடையது; மாட மாளிகைகள் நிறைந்தது; அகன்ற பெருந் தெருக்களை யுடையது. **கூடல், ஆலவாய்** என்ற பெயர்களும் அதற்கு உண்டு.

இத் தொன்மைமிக்க நகரத்தில் ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவர் நல்ல கல்வியறிவு உடையவர்; அரிய நூல்களை எல்லாம் பலருக்கும் கற்பிக்கும் ஆற்றல் பெற்றவர். அதனல் அவரை அனைவரும் **கணக்காயர்** என்றே அழைத்து வந்தனர். நாளடைவில் அவரது இயற்பெயர் மறைந்தது. மக்கள் நாவில் நாள் தோறும் ஒலித்துப் பழகிவந்த கணக்காயர் என்னும் பெயரே அவர் பெயராக நிலைபெற்றது.

அவர்க்கு **நக்கீரர்** என்னும் பெயருடைய புதல்வர் ஒருவர் இருந்தார். அவர் சங்க காலப் புலவருள் தலையாயவர்; அஞ்சா நெஞ்சினர்; நல்ல தமிழ்ப் புலமை உடையவர்; '**இறையனுர் களவியல்**' என்னும் நூலுக்கு நல்லதோர் உரை கண்டவர்; பத்துப்பாட்டுள் ஒன்ருகிய **திருமுருகாற்றுப்படை** என்னும் நூலை இயற்றியவர்; பரந்த எண்ணமும் உயர்ந்த கொள்கையும் உடையவர்; இலக்கியச் செறிவுடைய பாடல்களை யாப்பதில் வல்லவர்; முடியுடை வேந்தர் மூவரையும் அவரிலும் சிறப்பாகப் பாண்டியரையும் பாடிப் பரிசில் பல பெற்றவர்; தமிழ்நாடு முழுவதையும் நன்கறிந்தவர்; 'செல்வத்துப் பயன் ஈதல்' என்ற நெறியினைத் தெள்ளத் தெளிய உணர்த்தியவர்.

அக்காலத்தில் மதுரையில் **தமிழ்ச் சங்கம்** இருந்தது. அதில் நாற்பத்தெட்டுப் புலவர்கள் உறுப்பினராய் இருந்தனர். அதன் பெருமையை அறிந்த நக்கீரர், நாற்பத்தொன்பதாம் புலவராய் அதில் சேர்ந்தார்.

அச் சங்கத்தைப் பாண்டிய அரசன் சிறப்புற நடத்தி வந்தான். அவன் நாள் தவறாமல் புலவர்களைக் கூட்டுவான் ; புதுப்புது நூல்களை அரங்கேற்றச் செய்வான்; அவற்றைப் பற்றிப் புலவர்களோடு உரையாடுவான் ; புத்தம் புதிய கருத்துக்களையும் செய்திகளையும் அறிய ஆவல் கொள்வான்.

ஒரு நாள் அச்சங்கத்தில் '**களவியல்**' என்னும் நூல் பற்றிப் பேச்சு எழுந்தது. அஃது ஓர் இலக்கண நூல்; இறையனார் என்பவரால் இயற்றப் பெற்றது; அறுபது சிறு செய்யுட்களை — நூற்பாக்களை — உடையது.

பாண்டிய அரசன் அந்நூலின் பொருளை அறிய விழைந்தான்; அதன் பொருட்டு நாற்பத்தொன்பது புலவரையும் தனித்தனியே உரை எழுதித் தருமாறு வேண்டினான்.

புலவர் அனைவரும் தனித்தனியே உரை எழுதிக் கொடுத்தனர். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்புடையதாய் இருந்தது. ஆகவே, அவற்றில் யாருடைய உரையை ஏற்றுக் கொள்வது, யாருடைய உரையை ஏற்றுக் கொள்ளாது விடுவது என்று முடிவு செய்ய முடியாமல் தவித்தான்; இறைவனை நினைந்து வேண்டி வரங்கிடந்தான்.

ஒரு நாள் நள்ளிரவில் அரசன் கனவில் இறைவன் தோன்றினான், "அரசே! மனம் கவலற்க. இம் மதுரைநாநகரில் **உப்பூரிகுடிகிழான்** என்று ஒருவன்

இருக்கிருன். அவனுக்கு ஒரு மகன் உண்டு. அவன் பெயர் **உருத்திரசன்மன்** என்பது. அவன் ஐந்து வயதுடையவன் ; ஊமையன் ; பைங்கண்ணன் ; புன் மயிரன். அவனை அத்தகையவன் என்று இகழாமல் கொண்டு வந்து சங்கப் பலகையில் அமரச் செய்து, புலவர்களின் உரையைக் கூறச் செய்க. அவன் உண்மையான உரை கேட்டபோது மெய்ம்மயிர் பொடிப்பான்; கண்ணீர் வடிப்பான். அவ்வாறு இருக்கும் நிலைமைபெற்ற உரையை நல்லுரையாகக் கொள்க!'' என்று உரைத்தான். அது கேட்டு அரசன் மகிழ்ந்தான்.

மறுநாள் பாண்டிய அரசனல் சங்கம் கூட்டப் பெற்றது. அரசனும் புலவர் பெருமக்களும் ஒருவர் தவருது வந்திருந்தனர். இறைவன் கூறியபடி வெள்ளாடை உடுத்து, வெண்பூச் சூட்டி, வெண்சாந்து அணிந்து வந்த உருத்திரசன்மன் சங்கப் பலகையில் ஏற்றப் பெற்ருன். பிறகு அரசன் வேண்டுகோளுக்கு இணங்க ஒவ்வொருவராக உரை கூறி வந்தனர். அப்பொழுதெல்லாம் உருத்திரசன்மன் வாளா இருந்தான். **மருதனிளநாகஞர்** என்னும் புலவர் உரை கூறி வரும்போது மட்டும் சிற்சில இடங்களில் அவன் உடல் சிறிது அசைந்தது. அடுத்து, புலவர் பெருமான் நக்கீரர் தமது உரையைக் கூறி வந்தார். அப்பொழுது உருத்திரசன்மன் உணர்ச்சி வயப்பட்டான்; மெய்ம் மயிர் பொடித்தான் ; கண்ணீர் வடித்தான்.

உடனே அரசன், ' நக்கீரர் உரையே நல்லுரை, என ஏற்றுக்கொண்டான். யாவரும் புலவர் கீரரைப் போற்றினர். அன்று முதல் அவரைச் சங்கத்தின் தலைமைப் புலவராக யாவரும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டனர்.

# 9. எயினனும் நன்னனும்

சேரர்க்குரிய நாடு சேரநாடு. இந் நாட்டில் வெளியம் என்னும் பெயரினையுடைய நகர் ஒன்று உண்டு. இதனை **ஆய் எயினன்** என்னும் பெயரினை யுடைய சிற்றரச னொருவன் ஆண்டு வந்தான். அவன் வேளிர் மரபில் உதித்தவன். சிறந்த போர் வீரன்; **பசும்பூண் பாண்டியனுடைய** படைத்தலைவ னாகிய **ஆய் அதியனைக்** களத்தில் கொன்று வெற்றி பெற்றவன்; புள்ளினங்களிடத்துப் பேரன்புடைய வன்; அவற்றிற்கு எவ்வித இடையூறும் நேரா வண்ணம் ஓம்பி வந்தவன். அதனால், அவையும் அவனிடம் பேரன்பு கொண்டிருந்தன.

இவ்வாறு அவன் வாழ்ந்து வரும்போது, அவன் வழி வந்த **நன்னன்** என்னும் பெயருடைய சிற்றரசன் ஒருவன், சேர நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய **கொண்கான** நாட்டினை ஆண்டுவந்தான். அந் நாட்டின் தலைநகரம் **பாழி** என்பதாகும். நன்னன் ஒரு காலத்தில் சேரவரசரது படைத்தலைவனாய் விளங்கியவன்; பெண் கொலை புரிந்து பெரும் பழி பெற்றவன். மேலும், போர் வெறி பிடித்தவன். அவனது போர்க் கொடுமை குறித்துப் புலவர் பலர் பாட்டில் குறித்துள்ளனர். " நன்னன் சிற்றரசர்களை வென்றதோடு அடங்கமாட்டான். பெரும் படை யுடைய பேரரசர் மீதெல்லாம் போர் தொடுப்பான்; அவர்களை வெல்வான்; வென்ற அரசர்களுடைய

மனைவியர் கூந்தலை மழிக்கச் செய்வான்; அவ்வாறு மழிக்கச் செய்ததினின்றும் கிடைத்த கூந்தலை ஒன்று திரட்டிக் கயிறுய்த் திரிக்கச் செய்வான்; திரிக்கப் பட்ட கயிற்றால் அவ்வரசர்களுடைய யானைகளைக் கட்டி இழுத்து வந்து தன் நாடு சேர்ப்பான்!" என்று ஒரு புலவர் குறித்துள்ளார்.

இத்தகைய நன்னனும் ஆய் எயினனும் உயிர் ஒத்த நண்பர்களாய் வாழ்ந்து வந்தனர். நன்னன் எயினனிடம் கொண்டிருந்த அளவற்ற அன்புக்கு அறிகுறியாகத் தனது 'பிரம்பு' என்னும் பெயருடைய மலைக்கே ' ஆய் பிரம்பு ' என்று பெயரிட்டுப் போற்றி வந்தான் ; தனது **வாகை** என்னும் சிற்றூரினையும் அவனுக்கு அளித்து, அதற்கு அரசனுய் இருந்து காத்து வருமாறு செய்திருந்தான்.

இவ்வாறு இருவரும் மனமொத்த நண்பர்களாய் வாழ்ந்து வரும்போது கொண்கான நாட்டை அடுத் திருந்த **புன்றுட்டார்** என்பவர் நன்னன் மீது பகைத் தெழுந்தனர்.

அதனை அறிந்தான் நன்னன்; போருக்குப் புறப் பட ஆயத்தமானுன். அப்பொழுது தன் ஆருயிர் நண்பன் ஆய் எயினனை வரவழைத்தான்; அவ னிடம், " புன்றுட்டார் என் மீது போர் தொடுத் திருப்பது உனக்குத் தெரியும் என்று நினைக்கின்றேன். நான் அவரை வென்று வரப் போகின்றேன். அவ் வாறு நான் போகும் பொழுது என்னுேடு என் படை முழுமையும் வந்துவிடும். அப்போது எனது தலை நக ராகிய பாழிப் பெருநகரையும், அதில் உள்ள பெரும்

பொருளையும் காப்பதற்கு யாரும் இருக்கமாட்டார்கள். அது குறித்து நான் மிகவும் வருந்துகின்றேன். அதற்கு ஏதேனும் ஒரு வழி கூறுக!'' என்று கேட்டான் நன்னன்.

"இதற்கென்ன வழி வேண்டி யிருக்கிறது? அவற்றை நானே காத்துக் கொள்கின்றேன். நீ சிறிதும் அஞ்ச வேண்டாம். போருக்குச் சென்று புன்னாட்டாரை வென்று வருக!'' என்று விடையிறுத்தான் ஆய் எயினன்.

நன்னன் தன் நண்பன் ஆய் எயினனிடம் பாழி நகரையும், அதில் உள்ள பொருள்களையும் காப்பாற்றுமாறு கூறிவிட்டுப் புன்னாட்டாரை வெல்லச் சென்றான்.

நன்னனும் அவனது படைகளும் புன்னாடு சென்றிருப்பதை மிஞிலி என்னும் சிற்றரச னொருவன் அறிந்தான். உடனே அவன் பாழி மீது படையெடுத்து வந்து, அதனைத் தாக்கினான்.

மிஞிலி பாழியைத் தாக்குவதை அறிந்தான் ஆய் எயினன்; தன் நண்பன் நன்னனுக்கு அளித்த வாக்கை நினைந்தான்; வாகையினின்றும் தனது படையோடு பாழி வந்தடைந்தான்; மிஞிலியை எதிர்த்துத் தாக்கினான்.

பெருவீரன் ஆய் எயினன் தன்னைத் தாக்குவதை அறிந்த மிஞிலி பேரச்ச முற்றுக் கொற்றவையிடம் சென்றான்; "நான் ஆய் எயினனோடு போர் புரியப் போகின்றேன். அதில் நீ எனக்கு வெற்றி தேடித் தரல் வேண்டும். அவ்வாறு செய்தால் உனக்கு நிரம்பப் பலிப் பொருள் தருவேன்!'' என்று கூறிப் பராவிப் போர்க்களம் புகுந்தான்.

மிஞிலியும் ஆய் எயினனும் ஒருவரோடொருவர் தத்தம் ஆற்றல் காட்டி அரும் போர் புரிந்தனர். இறுதியில் ஆய் எயினன் களத்தே வீழ்ந்து உயிர் துறந்தான். அவன்பால் அன்புள்ள பறவைகள் எவ்வாறோ செய்தி அறிந்தன; விரைந்து களம் அடைந்தன; அவன்மீது வெயில் விழாவண்ணம் தம் சிறகுகளை விரித்து வட்டமிட்டுப் பறந்தன ; வாடி வருந்தித் தம் அன்பைக் காட்டின.

புன்னாட்டாரோடு போரிட்டுக் கொண்டிருந்த நன்னன், தன் வாகை நாட்டுக் களம் செல்லவோ, தன் பொருட்டு உயிர் துறந்த தனது ஆருயிர் நண்பன் ஆய் எயினனைக் காணவோ, தன் நகரம், அதிலிருந்த பெரும் பொருள் ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்ட மிஞிலியை அடித்து விரட்டவோ வந்தான் இல்லை! ஆயினும், அவன் ஒருகால் களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல் என்னும் சேர அரசனது வாள்வீச்சுப் பெற்று வாழ்விழந்தான் !

## பயிற்சி வினாக்கள்

### 1. புத்தரும், தேவதத்தனும்

1. சித்தார்த்தர் புத்தரான வரலாற்றைச் சுருக்கி வரைக. 2. 'புத்தரும் சுஜாதையும்' என்னும் பொருள்பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக. 3. தேவதத்தன் என்பவன் யார் ? அவன் புத்தர்மீது வெறுப்புக் கொள்ளக் காரணம் என்ன ? அதன் பொருட்டு அவன் செய்த தீய செயல்கள் எவை ? 4. தேவதத்தன் ஏவிவிட்ட நளகிரியின் செயல்களை வரைக. 5. அசாதசத்துரு என்பவன் யார் ? அவனது தீராப்பிணி எவ்வாறு தீர்ந்தது ?

### 2. வேடனும் அந்தணனும்

1. வேடனின் தோற்றச் சிறப்பை வரைக. 2. வானிலிருந்து எழும்பிய ஒலி கூறிய தென்ன ? 3. அந்தணன் மனைவி இறந்ததன் காரணத்தை அரசன் எவ்வாறு தெளிந்தான் ?

TB
O31,3(9)
N65



3. தாயும் சேயும்

1. பாஞ்சாலங்குறிச்சி மக்கள் எத்தகையவர்? அவர்கள் செய்த செயல்களை வரைக. 2. ஊமைத்துரை காப்பாற்றப் பட்ட விதத்தை விளக்கி வரைக.

4. பத்திரையும் சத்துகனும்

1. சத்துகன் கொலைக்களம் செல்லக் காரணம் என்ன? 2. மலைவாழ் தெய்வம் கூறியது யாது? 3. குண்டலகேசி என்பவர் யார்? அவருக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன? 4. 'குண்டலகேசி செய்த சமயப் போர்' பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.

5. அரியநாதரும் சோதிடரும்

1. சொன்ன சொல் தவருதவர் யார்? அவரைப்பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக. 2. மதுரையில் அரியநாதர்க்கும் அந்தணர்க்கு மிடையே நிகழ்ந்த உரையாடலைச் சுருக்கி வரைக. 3. அந்தணரிடம் அரியநாதர் எழுதிக் கொடுத்த ஓலையில் அடங்கிய செய்தி யாது?

6. வில்வீரனும் கொடுங்கோலனும்

1. 'நீ ஏன் பிறிதோர் அம்பினை எடுத்தாய்?' என்று கேட்டது யார்? அதற்கு வேடன் கூறிய மறுமொழி யாது? 2. 'தெல், நாட்டுப் பற்றுடையவன்' என்னும் பொருள் குறித்து ஒரு சிறு கட்டுரை வரைக. 3. ஜஸ்லரின் கொடுங்கோன் மையை விளக்குக.

7. தந்தையும் மைந்தனும்

1. தெற்கே குழப்பம் ஏற்படக் காரணம் என்ன? 2. தாய்க்கும் மைந்தனுக்குமிடையே நடந்த உரையாடலைச் சுருக்கி வரைக. 3. மைந்தன் தந்தையைப் பிடித்துவரக் காரணம் என்ன?

8. பாண்டியனும் நக்கீரரும்

1. 'நக்கீரர் உரையே நல்லுரை' என அரசன் எவ்வாறு தெளிந்தான்? 2. உருத்திரசன்மனின் தோற்றச் சிறப்பை வரைக.

86600

9. எயினனும், நன்னனும்

1. நன்னனும் ஆய் எயினனும் பெரு நட்புடையவர் என்பதனை விளக்குக. 2. நன்னன் பேராற்றலுடையவன் என்பது குறித்துப் புலவர் கூறியுள்ளது யாது?

---

278/8